# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, ஜூலை 19 2019. இதழ் - 71







**மீண்டும் கடந்துபோன ஒரு கறுப்பு ஜூலை நினைவு...**

பக்கம் - 03



**கிழக்கில் எழுந்தருளிய விக்கினேஸ்வரர் காவடி எடுப்பவர்கள் ஜாக்கிரதை!**

பக்கம் - 04




**படுவான்கரையிலும் தமிழுக்கு அழிவா?**

தமிழ் கடவுள் தாந்தாமலை முருகன் கொடியேற்றமும் நேற்றுதான் இடம்பெற்றது.

பக்கம் -07



**இது கூட்டுக்களின் காலம்...**

மப்பும் மந்தாரமுமாக இருந்த நாட்டின் அரசியல் சூழல், காலநிலை அறிக்கை

பக்கம் -06




# பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாகப் புதிய வரைபு தயார்

## ஆனால் வேறுபாடுகள் இல்லையெனக் குற்றச்சாட்டு

-நி.அமரிதஸன் -

ஜெனீவா மனித உரிமைச் சபையின் அழுத்தங்களின் பின்னரான சூழலில் இலங்கையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாக வேறு புதிய சட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. புதிய விதிகள் அடங்கிய நகல் சட்டமூலம் அமைச்சரவையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆரம்பக்கட்ட வரைபுகள் மாத்திரமே அமைச்சரவையால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் முழுமையான வரைபு விரைவில் பூர்த்தியாகுமெனவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற ஐஎஸ் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் நடத்திய தாக்குதலின் பின்னரான சூழலில் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு மாற்றீடான சட்டம் ஒன்றை அவசரமாக உருவாக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பிரதமர் அலுவலக அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

இந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது முதற்ட்ட வரைபுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நாடாளுமன்றத்திலும் விவாதம் நடத்தப்பட்டு விரைவில் புதிய சட்டம் அமுலுக்கு வருமமெனவும் கூறப்படுகின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே புதிய சட்ட மூலத்துக்கான ஆரம்ப வரைபை அமைச்சாரவையில் சமர்ப்பித்திருந்தார்.

அதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள பல பிரிவுகள் புதிய நகல் சட்டமூலத்தில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் வேறுபாடுகள் எதுவுமே இல்லையென ஜே.வி.பி உறுப்பினர் பிமல் ரட்ணாயக்கா கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி பக்கம்... 02

## சியோன் தேவாலயத்தில் 3ம் மாத நினைவு தினம்



மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தில் இடம்பெற்ற குண்டுதாக்குதலின் 3ம் மாத நினைவு தினத்தை முன்னிட்டு சியோன் தேவாலய பிரதான போதகர் றொசான் மகேசன் தலைமையில் மட்டக்களப்பு வில்லியம் ஒல்ட் மண்டபத்தில் நினைவஞ்சலி ஆராதனை இடம்பெற்றது.

தொடர்ச்சி பக்கம்... 02

## அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு




கடந்த வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட அரச ஊழியர்களுக்கான 2,500 ரூபா

தொடர்ச்சி பக்கம்... 05

## கல்முனையில் பள்ளிவாசல் வீதியாக பெயர்மாற்றம் செய்யப்பட்ட ஆலய வீதி : பொலிசில் முறைப்பாடு

பலவருடங்களாகப் பயன் படுத்தப்பட்டுவரும் தரவைப்பிள்ளையார் ஆலய வீதி கடற்கரைப்பள்ளி வீதியாக பெயர்மாற்றம் செய்யப்பட்டிருப்பதையடுத்து கல்முனையில் மீண்டும் சர்ச்சை ஏற்பட்டிருக்கிறது.

மீண்டுமொரு சர்ச்சையை முஸ்லிம் அரசியல்வாதியொருவர் தோற்றுவித்திருக்கிறார் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தரவை பிள்ளையார் ஆலய வீதியின் பெயரை மாற்றியதற்கு எதிராக கல்முனை நகரசபையின் தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள்



((காரைதீவு நிருபர் சகா)

தொடர்ச்சி பக்கம்...10



## மட்டக்களப்பு இந்து மகளிர் மன்றத்தால் சுவாமி விபுலாநந்தரின் 72ஆவது நினைவு தினம் அஷ்டிப்பு



மட்டக்களப்பு ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள சுவாமி விபுலாநந்தரின் உருவச் சிலைக்கு 19.07.2019ஆந் திகதி மட்டக்களப்பு இந்து மகளிர் மன்றத்தினரும் இக்கல்லூரி மாணவிகளும் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். மட்டக்களப்பு இந்து மகளிர் மன்றத்தின் தலைவி திருமதி சக்திராணி தங்கவேல் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் மட்டக்களப்புச் சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபையின் பொருளாளரும் முன்னாள், தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளருமான திரு.த.யுவராஜன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

## தாந்தாமலை கொடியேற்றம்



(படுவான் பாலகன்)

கிழக்கிலங்கையில் வரலாற்றுச் சிறப்புமிக்கதும், தொன்மைவாய்ந்ததும், ஆடகசவுந்தரி அரசியாலும், முற்காலத்து முனிவர்கள் பலராலும் "தாண்டவகிரி" என அழைக்கப்படுவதும், தற்காலத்தில் சின்னக்கதிர்காமம் என அழைக்கப்படுவதுமான மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் தாந்தாமலையில் அமைந்துள்ள ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று (25) வியாழக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கொடியேற்றத்திற்கான கொடிச்சீலை மட்டக்களப்பு தாமரைக்கேணி ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலய பரிபாலன சபையினரால் கொண்டுவரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பூசை, ஆராதனைகள் சிவஸ்ரீ மு.கு. சச்சிதானந்தக்குருக்கள் தலைமையில் நடைபெற்றன.

இன்றிலிருந்து தொடர்ச்சியாக 21நாட்கள் திருவிழாக்கள் இடம்பெற்று, 15.08.2019ம் திகதி காலை 06மணிக்கு திருவோண நட்சத்திரசுபமுகூர்த்த வேளையில் தீர்த்தோற்சவம் இடம்பெற்று மகோற்சவம் நிறைபெறவிருக்கின்றது.

## கிழக்கில் 12 சமூக சேவை உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடங்கள்

கிழக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தில் சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கான 12 வெற்றிடங்கள் கிழக்கு மாகாணம் முழுதும் நிலவி வருவதாக மாகாண சமூக சேவை திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் மதிவண்ணண் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி, வெருகல், கோமரங்கடவல, மொரவெவ பிரதேச செயலகங்களிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை ஓட்டமாவடி, காத்தான்குடி பிரதேச செயலகங்களிலும், அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில், பொத்துவில், நிந்தவூர், இறக்காமம், மகாஓயா உள்ளிட்ட பிரதேசங்களிலும் மொத்தமாக 12 வெற்றிடங்கள் நிலவுவதாகவும் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் புள்ளி விபரம் தெரிவிக்கிறது. இது தொடர்பான வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சமூக சேவை உத்தியோகத்தர் பதவிக்கான கல்வித் தகைமையாக குறித்த துறையில் பட்டதாரிப் பட்டம் ஏற்றுக்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கிழக்கு மாகாணத்தில் இது தவிர ஏனைய திணைக்களங்களிலும் பல வெற்றிடங்கள் நிலவுகின்றன. ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பத்தை கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு கோர வேண்டும் என வேலையில்லா பட்டதாரிகளால் எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கில் ஆளுனர்கள் அடிக்கடி புதிது புதிதாக நியமனம் பெறுவதால் நியமனம் வழங்குதல் தொடர்பில் பின்னடைவுகள் ஏற்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.அரசாங்கத்தினால் வேலையில்லா பட்டதாரிகள் தொடர்ந்தும் ஏமாற்றப்படுவது ஏன் என்ற கேள்வியும் தங்களுக்குள் கவலையை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கும் பட்டதாரிகள் இது தொடர்பில் மாகாண அரசாங்கம் உரிய உயரதிகாரிகள் கூடிய கவனமெடுக்குமாறும் கேட்டுக் கொள்கின்றனர்கள்.

எனவே மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களை கோருவதற்கு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறும் வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.

தொடர்ச்சி...

### சியோன் தேவாலய.....

இந் நினைவஞ்சலி ஆராதனையில் சியோன் ஆலய அடியார்கள் குண்டு தாக்குதலுக்குட்பட்ட உயிரிழந்தோரின் உறவினர்கள் ஆகியோர் மிகவும் உருக்கமான முறையில் பிராத்தனைகளை மேற்கொண்டனர். இந் நினைவஞ்சலி ஆராதனைக்கு சுவிஸ் நாட்டைச் சேர்ந்த மத போதகர்களும் திருப்பலி ஆராதனைகளிலும் கலந்துகொண்டனர்.

## தமிழ் மக்கள் கூட்டணியின் கிழக்கு அலுவலகம் மட்டக்களப்பில்



தமிழ் மக்கள் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட பணிமனை கட்சியின் செயலாளர் நாயகம் முன்னாள் நீதியரசரும் முன்னாள் வடமாகாண முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ் மக்கள் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும் நிர்வாக உப செயலாளருமான எஸ். சோமசுந்தரம், நிர்வாக உப செயலாளரும் கிளிநொச்சி மாவட்ட குழு உறுப்பினருமான ஆலாலசுந்தரம், சட்டவிவகார உப செயலாளர் ரூபா சுரேந்தர், மகளிர் அணி உப செயலாளர் இளவேந்தி நிர்மலராஜ், கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் அன்ரனி கெப்ரியல், வவுனியா மாவட்ட அமைப்பாளர் செ.சிறிதரன், ஊடகம் மற்றும் செயற்திட்ட ஆக்கத்திற்கான உப செயலாளர் த.சிற்பரன், இளைஞர் அணி இணைப்பாளர் கிருஸ்ணமீனன், தொகுதி அமைப்பாளர் இரா.மயூதரன், கணக்காளர் ராஜாதுரைசிங்கம் மற்றும் ஊடக உதவியாளர் எம். சதீஸ் உள்ளீட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இப்பணிமனையானது மட்டக்களப்பு மாமாங்கம் சோமசுந்தரம் வீதியில் அமைந்துள்ள 51/7 இலக்க கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் கட்சி தொடர்பான மக்கள் சந்திப்புக்கள் மாதாந்த ஒன்றுகூடல்கள் இப்பணிமனையிலேயே நடைபெறவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும் நிர்வாக உப செயலாளருமான எஸ். சோமசுந்தரம் கருத்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி...

### பயங்கரவாதத் தடைச் சட்ட.....

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு மாற்றீடான புதிய நகல் சட்டமூலத்திற்கான ஆரம்ப வரைபுகள் திருப்தியளிக்கவில்லையென தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் ஜெஹா பெரேராவும் குற்றம் சுமத்தியிருந்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிக் கொண்டுவரப்படவுள்ள புதிய சட்டமூலம் ஏற்கக் கூடியதல்ல என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சட்டத்தரணி சுமந்திரன் ஏற்கனவே குற்றம் சுமத்தியிருந்தார். இதேவேளை. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக புதிய சட்டமூலம் அமுல்படுத்தப்படுமென அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கூறியுள்ளார். ஆனால் இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறந்தபந்துவீச்சாளர் அஜித்குமாருக்கு பாராட்டு!



(படங்கள் : காரைதீவு நிருபர் சகா)

தேசிய மட்டத்தில் கடினபந்து வேகப்பந்துவீச்சாளரைத் தெரிவுசெய்யும் எயர்ரெல் இறுதிக்கட்டத்தேர்வில் இரண்டாவது ஸ்தானத்திலிருக்கும் காரைதீவு விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த கிரிக்கட் வீரர் எஸ். அஜித்குமார் கழகத்தால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். காரைதீவு விபுலாநந்தா மைதானத்தில் பரிசளிப்புவிழாவில் கழகத்தலைவர் எல்.சுரேஸ் குறித்த தேசிய வீரர் அஜித்குமாருக்கு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிப்பவதைக்காணலாம்.

## காரைதீவில் சாய்ந்தமருது விளாஸ்ரர் அணி சாம்பியன்!

(படங்கள் : காரைதீவு நிருபர் சகா)

தேசிய மட்டத்தில் கடினபந்து வேகப்பந்துவீச்சாளரைத் தெரிவுசெய்யும் எயர்ரெல் இறுதிக்கட்டத்தேர்வில் இரண்டாவது ஸ்தானத்திலிருக்கும் காரைதீவு விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த கிரிக்கட் வீரர் எஸ்.அஜித்குமார் கழகத்தால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். காரைதீவு விபுலாநந்தா மைதானத்தில் பரிசளிப்புவிழாவில் கழகத்தலைவர் எல்.சுரேஸ் குறித்த தேசிய வீரர் அஜித்குமாருக்கு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிப்பவதைக்காணலாம்.





# மீண்டும் கடந்துபோன ஒரு கறுப்பு ஜூலை நினைவு...

## குற்ற உணர்வும் இரக்க உணர்வும் அற்ற பெரும்பான்மை

மீண்டும் ஒரு கறுப்பு ஜூலை நினைவு தினம் கடந்து போனது. 1983 கலவரங்கள் நடந்து சுமார் நான்கு தசாப்தங்கள் கடந்துபோய்விட்டன. ஆனால், இலங்கையில் வன்முறைகள் என்பது அதுதான் முதல் தடவையல்ல. அதுவே இறுதி என்றும் கூறமுடியவில்லை.

“83 ஆடிக் கலவரங்கள்” திட்டமிடப்பட்ட சிவில் வன்முறைகள் என்பது இன்று ஊரறிந்த விடயம். அதற்கு முன்னரும் 1977 மற்றும் 1958 என கலவரங்கள் பல நடந்திருந்தாலும் 83 கலவரம் அந்த வகைகளில் பெரியது. இலங்கை முழுவதும் தமிழர்கள் திட்டமிட்ட வகையில் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களின் உடமைகள் அழிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பால் நடத்தப்பட்ட இராணுவத்தினர் மீதான தாக்குதலே இதற்கான காரணம் என்று கூறப்பட்டாலும் அது மாத்திரந்தான் இதற்கான காரணம் என்றோ அல்லது அந்தத் தாக்குதல் நடந்திராவிட்டால் 83 கலவரம் நடந்திருக்காது என்றோ கூறமுடியாது.

அதனைத் தொடர்ந்து தமிழ் மக்களின் கிளர்ச்சி, ஒரு பெரும் போர் என்பன நடந்து முடிந்திருக்கின்றன. அந்தப் போரில் இரு தரப்பிலும் ஆட்கள் கொல்லப்பட்டார்கள் என்று கூறினாலும் போரில் இறுதிக்கட்டத்தில் நடந்தவை மீண்டும் ஒரு ‘மனிதப் படுகொலை’ என்றே அனைவராலும் பார்க்கப்படுகின்றன. ஆக மொத்தத்தில் அது மீண்டும் ஒரு தமிழர் படுகொலை.

83 கலவரங்களை, கறுப்பு ஜூலையை இன்று நாம் நினைவுகூரும் நிலையில் இரு விடயங்களை இங்கு பார்க்க வேண்டியுள்ளது. இன்று இந்தக் கலவரம் நடந்து 40 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் இலங்கையின் மக்களின், குறிப்பாக பெரும்பான்மை மக்களின் மனதில் எந்தவிதமான மாற்றம் நடந்ததாகத் தெரியவில்லை. கிட்டத்தட்ட இரு தலைமுறைகள் கடந்துவிட்ட காலப்பகுதி இது. ஆனால், பெரும்பான்மை இன மக்கள் மனதில் இந்தக் கலவரங்கள் குறித்த குற்ற உணர்வு எதனையும் இன்றுவரை காணமுடியவில்லை. உலகில் பல சமூகங்கள் முன்னர் படுகொலையாளிகளாக இருந்து மாறியிருக்கின்றன. ஆனால், இலங்கையில் பெரும்பான்மையினர் மத்தியில் தாம் செய்த வன்முறைகள், படுகொலைகள், இன அழிப்புகள் குறித்து இன்று வரை ஒரு குற்ற உணர்வைக் காணமுடியவில்லை. இன்றும் சந்தர்ப்பம் கிடைத்த தருணங்களில் சிறுபான்மை மக்களை தாக்க அவர்கள் தயங்குவதில்லை. 40 வருடம் கடந்தும் ஒரு இனத்தின் மனதில் இவை குறித்த மாற்றம் ஏற்படாததை கவலையோடே நோக்க வேண்டியிருக்கிறது.

83 கலவரங்களில் இன்னுமொரு விடயமும் இங்கு பேசியாக வேண்டும். அந்தக் கலவரங்களில் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டவர்கள், அழிவை எதிர்கொண்டவர்கள் மலையகத் தமிழர்கள்தான். பிரித்தானியரால் “நல்வாழ்வு கிடைக்கும்” என்று கூறி, ஏமாற்றி இங்கு கொண்டு வரப்பட்ட அவர்கள் மலையகக் காடுகளை களனிகளாக மாற்றிய “தேவதூதர்கள்”. இன்றுவரை அவர்கள் உழைத்துக்கொடுத்ததே இலங்கையின் பொருளாதாரம். சிங்களவர்களோ அல்லது இலங்கையின் ஏனைய சிறுபான்மையினரோ அவர்களுக்கு

**சீவகன் பூபாலரட்ணம்**

போட்டியாக இந்த விடயத்தில் உரிமைகோரமுடியாது.

அவர்கள் ஈட்டிக்கொடுத்த பொருளாதாரமே, அட்டைக்கடியில், குளிர்க்காட்டில் உயிரைக் கொடுத்து அவர்கள் உழைத்த உழைப்பே இலங்கையின் செல்வம். வெள்ளையர்கள் அவர்களைக் கொண்டு மலைகளில் போட்ட வீதிகளும் இரும்புப் பாதையுமே இன்றுவரை இலங்கையின் பெரிய உட்கட்டுமானம். கல்வியிலோ அல்லது வேலைவாய்ப்பிலோ இலங்கைத் தமிழரைப் போல அவர்கள் இதுவரை சிங்களவர்களோடு போட்டிக்கு நிற்கவில்லை. ஆனால், அந்த தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்றுவரை மாதச் சம்பளத்தை வழங்கக்கூட இலங்கை நினைக்கவில்லை. இன்னமும் தினக்கூலியாகத்தான் அவர்கள் போராடுகிறார்கள். அந்த தினக்கூலியும் ஏனையவர்களோடு ஒப்பிடும்போது மிகக்குறைவு. இவர்கள்தான் 83 கலவரங்களில் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டார்கள். அவர்கள் விடயத்தில் “இலங்கையை உருவாக்கிய ஒரு இனத்தை தாக்குகிறோமே” என்ற குற்ற உணர்வும் பெரும்பான்மைக்கு கிடையாது, நமக்காக உழைத்த, நமக்கு இதுவரை போட்டியாக இல்லாத ஒரு இனத்துக்கு அடிப்படை வாழ்வு வசதியையாவது கொடுக்க வேண்டுமே என்ற இரக்க உணர்வும் பெரும்பான்மைக்குக் கிடையாது.

83 கலவரத்துக்குப் பின்னர் அந்த அளவுக்கு பெரிய கலவரம் இலங்கையில் நடக்கவில்லைதானே என்று சிலர் வாதாடலாம். ஆனால், இங்கு இன்னுமொரு விடயத்தையும் பார்த்தாக வேண்டும். அதாவது இலங்கையில் 83 சிவில் கலவரம் நடந்த உடனே வெளியுலகில் இலங்கையின் பெயருக்கு பெரும் பாதகம் உருவானது. அதுவே அதன் பிறகு அந்த அளவுக்கு கலவரங்கள் நடப்பதற்கான வாய்ப்பை குறைத்தது. ஆனால், முள்ளிவாய்க்காலில் நடந்த இராணுவக் கலவரத்தை எதுவும் தடுக்க முடியவில்லை. அந்தச் சம்பவத்தைக் கூட ஐநா மனிதஉரிமைப் பேரவை போன்றவை

தொடர்ச்சி பக்கம்... 15

---

## சொல்லத் துணிந்தேன்! 16

# கல்முனையும் கல்முனைக்குடியும் ஒன்றல்ல!

கல்முனை வடக்கு உபபிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தும் விவகாரத்தில் முஸ்லீம் தரப்பினர் கல்முனை என்பது தெற்கே கல்முனை ஸாகிராக் கல்லூரியிலிருந்து ஆரம்பித்து வடக்கே தாளவெட்டுவான் வரையும் உள்ளதாகச் சித்தரித்து அதனையே தங்களது பூர்வீகம் எனச் சொந்தம் கொண்டாடுகின்றனர். அதற்குச் சார்பாக அவர்கள் முன்வைப்பது 1892ஆம் ஆண்டின் 18ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் 1897ஆம் ஆண்டின் 5459 இலக்கமுடைய ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பெற்ற அரசவர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பெற்ற அப்போதைய கல்முனை 'சனிற்றறி' சபை (Sanitary Board) யின் எல்லைகளையேயாகும். இது நன்கு திட்டமிட்டுச் சோடிக்கப்பட்ட தவறான வாதம் ஆகும்.

கல்முனை என்பதும் கல்முனைக்குடி என்பதும் இரு வெவ்வேறு தனித்தனிக் கிராமங்களாகும். அப்போது கல்முனை என்பது தனித்தமிழ்க் கிராமமாகும். கல்முனைக்கடி 90 வீதத்திற்குமேல் முஸ்லீம்களைக் கொண்ட முஸ்லீம் பெரும்பான்மைக் கிராமாகும். கல்முனையின் தெற்கு எல்லை கல்முனைத் தரவைப் பிள்ளையார் கோயில் வீதியும் வடக்கு எல்லை தாளவெட்டுவான் வீதியும் ஆகும். அதாவது கல்முனையின் தென்எல்லை கல்முனைக்குடியும் வடஎல்லை பாண்டிருப்பு கிராமமுமாகும். அதேபோல் கல்முனைக்குடியின் தெற்கு எல்லை கல்முனை ஸாகிராக் கல்லூரி வீதியும் வடக்கு எல்லை கல்முனைத்தரவைப் பிள்ளையார் கோயில் வீதியுமாகும். அதாவது கல்முனைக்குடியின் தென்எல்லை சாய்ந்தமருது கிராமமும் வட எல்லை கல்முனையும் ஆகும். கல்முனையையும், கல்முனைக்குடியையும் பிரிக்கும் எல்லையாகச் சுமார் 400 வருடங்கள் பழைமை வாய்ந்த கல்முனைத் தரவைப்பிள்ளையார் கோயில்வீதி விளங்கிற்று, மேலும் கொழும்பு – இரட்மலான-வெல்லவாய – மட்டக்களப்பு (C.R.W.B Road) வீதியில் கல்முனை ஊர் ஆரம்பிப்பதைக் குறிக்கும் 'கல்முனை' பெயர்ப்பலகை பொதுமராமத்து இலாகாவினால் (Public works Department) பிரதான வீதியில் கல்முனைத் தரவைப் பிள்ளையார் கோயிலுக்கு முன்னால்தான் நிர்மாணிக்கப் பெற்றிருந்தது.

கல்முனைக்குடியைக் கல்முனையோடு பிணைத்து 1897இல் கல்முனை என்ற பெயரில் 'சனிற்றறி' சபை நிறுவப்பட்டது என்பதினாலோ அல்லது பின்னாளில் இது 1946ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பட்டினசபைகள் சட்டத்தின் கீழ் 1947 இல் கல்முனை என்ற அதே பெயரில் பட்டினசபை (Town Council) ஆக்கப்பட்டது என்பதினாலோ இரு வெவ்வேறு தனித்தனிக் கிராமங்களான கல்முனையும், கல்முனைக்குடியும் ஒரே தனிக்கிராமமாகி விடமுடியாது.

தற்போதுள்ள கல்முனைத் தேர்தல் தொகுதி, கல்முனை மாநகரசபை, கல்முனை (பிரதான) பிரதேச செயலகம்



என்பன சாய்ந்தமருது, கல்முனைக்குடி, கல்முனை பாண்டிருப்பு, மருதமுனை, பெரிய நீலாவணை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆகிய தனித்தனிக்கிராமங்களை உள்ளடக்கியுள்ளவை.

கல்முனை என்ற பெயரில் தேர்தல் தொகுதியும், கல்முனை என்ற பெயரில் மாநகர சபையும், கல்முனை என்ற பெயரில் பிரதேச செயலகமும் அமைந்துள்ள காரணத்தால் முழுக் கல்முனைத் தேர்தல் தொகுதியும், முழுக்கல்முனை மாநகரசபைப் பிரதேசமும், முழுக்கல்முனைப் பிரதேசசெயலக பிரிவுப் பிரதேசமும் கல்முனை என்னும் பெயரில் ஒரு தனிக்கிராமம் ஆகிவிடமுடியாது.


**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

அதுபோலவே 1897ல் கல்முனையும், கல்முனைக்குடியும் இணைந்த 'சனிற்றறி' சபை கல்முனை என்ற பெயரில் அமைந்த காரணத்தாலும் 1947இல் கல்முனையும், கல்முனைக்குடியும் இணைந்து கல்முனை என்றபெயரில் பட்டினசபையாக அமைந்த காரணத்தாலும் முழுச் 'சனிற்றறி' சபைப் பிரதேசமும், முழுப்பட்டினசபைப் பிரதேசமும் கல்முனை என்னும் பெயரில் ஒரு தனிக்கிராமமாகி விடமுடியாது என்பதை முஸ்லிம் தரப்பினர் புரிந்து கொள்ள வேண்டும்.

அப்போதைய ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஒரு மாவட்டமானது நிருவாகத் தேவைகளுக்காக 'வன்னிமை' களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அப்போதைய நிர்வாக அலகான வன்னிமையைத் தற்போதுள்ள பிரதேச செயலகப்பிரிவுடன் ஒப்பிடலாம். ஒவ்வொரு வன்னிமையும் 'உடையார் பிரிவு' எனும் துணைப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. உடையார் பிரிவுகள் மேலும் பொலிஸ் துணைப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இப் பொலிஸ் துணைப்பிரிவுகள் 'குறிச்சிகள்' என (Village Headman's Division) அழைக்கப்பட்டன. கல்முனை ஒருதனியான உடையார் பிரிவாக இருந்தது. அது கல்முனை 1ஆம் குறிச்சி, 2ஆம் குறிச்சி, 3ஆம் குறிச்சி என மூன்று குறிச்சிகளை கொண்டிருந்தது. அதேபோல் கல்முனையின் அயல் கிராமமான கல்முனைகுடியும் கல்முனைக்குடி 01ஆம் குறிச்சி, 02ஆம் குறிச்சி, 03ஆம் குறிச்சி, 04ஆம் குறிச்சி, 05ஆம் குறிச்சி என ஐந்து குறிச்சிகளைக் கொண்டிருந்தது. தனித்தனிக்கிராமங்களாக விளங்கிய கல்முனையின் மூன்று குறிச்சிகளையும் கல்முனைக்குடியின் ஐந்து குறிச்சிகளையும் சேர்த்துத்தான் தமிழர்களைச் சிறுபான்மையினராக்கும் திட்டத்துடன் புதிதாக 1947இல் உருவான 'கல்முனைப் பட்டினசபை'யானது இரண்டு வட்டாரங்கள் தமிழ்ப் பெரும்பான்மையாகவும் ஐந்து வட்டாரங்கள்; முஸ்லீம் பெரும்பான்மையாகவும் வருமாறு மொத்தம் 07 வட்டாரங்களுடன் உருவாக்கப்பட்டது. முன்பு கல்முனைக்குடியானது கல்முனையுடன் சேர்ந்ததாக இருந்ததென்றால் கல்முனைக்குடியின் ஐந்து குறிச்சிகளும் கல்முனையின் மூன்று குறிச்சிகளுடன் தொடராக வருமாறு கல்முனை 4ஆம் குறிச்சி, கல்முனை 5ஆம் குறிச்சி, கல்முனை 6ஆம் குறிச்சி, கல்முனை 7ஆம் குறிச்சி, கல்முனை 8ஆம் குறிச்சி என்றல்லவா இருந்திருக்க வேண்டும். அவ்வாறு அமையவில்லை என்பதே கல்முனையும் கல்முனைக்குடியும் இரு

தொடர்ச்சி பக்கம்... 15

# கிழக்கில் எழுந்தருளிய விக்கினேஸ்வரர் காவடி எடுப்பவர்கள் ஜாக்கிரதை!



கிழக்கின் அரசியலில் புத்திஜீவிகள் இருக்க வேண்டும் என்ற கருத்து கொஞ்சம் உரத்துக் கூறப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. சில அமைப்புக்கள், கட்சிகள் தாங்கள் புத்திஜீவிகளைக் கொண்டிருக்கின்றோம் என்று பேசிக்கொள்வதனையும் அவர்கள் முன்னாள் வடமாகாண முதலமைச்சர் திரு.சி.வி.விக்கினேஸ்வரன் அவர்களை மட்டக்களப்புக்கு அழைத்து வருவதில் பெருமைகொள்பவர்களாகவும் இருக்கின்றனர். இங்குள்ள கிழக்குத் தமிழர் ஒன்றியம் போன்ற அமைப்புக்கள் அவருடன் கூட்டுச் சேர்வதை பெரும் பாக்கியமாகக் கருதுவதனையும் காணமுடிகின்றது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்களோ இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பின் புத்திஜீவிகளை வேட்பாளர்களாக நியமிக்கும் என்றும் அவ்வாறு வேட்பாளர்களாக இன்னை இன்னார் நியமிக்கப்படுவார்கள் என்ற ஊகங்களையும் வெளிப்படுத்துகின்றனர்.

இவற்றைப் பார்க்கின்ற போது ஈழத்தமிழர் அரசியல் இதுவரைகாலமும் புத்திஜீவிகள் அற்ற முட்டாள்களின் கூட்டமாகவா இருந்திருக்கின்றது எனும் கேள்வி எழுவதை தவிர்க்கமுடியவில்லை.

ஈழத் தமிழர் அரசியலை வரலாற்று ரீதியாகப் பார்க்கின்ற போது காலனித்துவ காலங்களில் யாழ்ப்பாண சமூகத்துக்குக் கிடைக்கப்பெற்ற ஆங்கிலக் கல்வி வாய்ப்புகளினால் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்று காலனித்துவ ஆட்சியில் பங்கு கொண்டு ஆங்கில ஆட்சியாளர்களின் நம்பிக்கைக்குரியவர்களாக யாழ்ப்பாண உயர் வர்க்கத்தினரே இருந்து வந்துள்ளனர். உதாரணத்திற்கு ஆ.குமாரசுவாமி என்பவர் 1810ம் ஆண்டே தேசாதிபதியின் தமிழ் மொழிபெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டார். பின் இவரே 1833ம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட சட்ட நிருபண சபைக்கு உத்தியோகப்பற்றற்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். குமாரசுவாமியின் மறைவுக்குப் பின் சைமன் காசிச் செட்டி அவர்கள் சட்ட நிருபணசபையின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

சைமன் காசிச் செட்டிக்குப் பின் இராமநாதனுடைய மாமாவாகிய முத்துக்குமாரசுவாமி அவர்கள் 1862ம் ஆண்டு தொடக்கம் 1879ம் ஆண்டு வரையான 17 வருடங்கள் சட்ட நிருபணசபையின் உறுப்பினராக இருந்தார்.

முத்தக்குமாரசுவாமியின் பின்பு அவருடைய மருமகனான பொன். இராமநாதன் சட்ட நிருபணசபையின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1879 தொடக்கம் 1892ம் ஆண்டு வரையான 13 வருடங்கள் அவர் இப்பதவியினை வகுத்திருந்தார். (மாமனும் மருமகனும் தொடர்ச்சியாக 30 வருடங்கள் சட்ட நிருபணசபையின் உறுப்பினர்களாக இருந்துள்ளார்கள்) இவர் பிரித்தானிய அரசால் 1889ல் சேர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். 1892ல் அவருடைய சட்ட நிருபண உறுப்புரிமை முடிவுபெற இலங்கையின் சொலிசிற்றர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அதன் பிறகு 1902ல் கிங்ஸ் கவுன்சிலராக பிரித்தானிய அரசால் நியமிக்கப்பட்டு 1903ல் ஓய்வு பெற்றார்.

இதன் தொடர்ச்சியாக ஜி.ஜி. பொன்னம்பலம், (தமிழ் காங்கிரஸ்) எஸ். ஜே.வி.செல்வநாயகம், (தமிழரசுக் கட்சி) அ.அமிர்தலிங்கம், (தமிழர் விடுதலைக் கூட்டணி) இரா.சம்பந்தன் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) எனும் யாழ்மேலாதிக்க 'அப்புக்காத்து' அரசியலே இருந்து வருகிறது.

எனவே ஆ.குமாரசுவாமி, சைமன் காசிச் செட்டி, முத்துக்குமாரசுவாமி, சேர்.பொன். இராமநாதன், சேர்.பொன்.அருணாச்சலம், ஜி.ஜி.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம், அ.அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், தற்போது இரா.சம்பந்தர், சுமந்திரன் என இலங்கையின் தலைசிறந்த புத்திஜீவிகளும் சட்டமேதைகளும், சட்டத்தரணிகளும் இருந்து கொண்டுதான் ஈழத் தமிழர்களின் அரசியலினை தலைமைதாங்கி நடாத்திக் கொண்டிருந்தார்கள் / கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு தலைமை தாங்கி நடாத்திக் கொண்டிருந்த / நடாத்திக் கொண்டிருக்கும் புத்திஜீவிகளினால் தமிழ் மக்கள் அடைந்த அரசியல் இலாபங்கள் என்ன என்று பார்த்தால் 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை' யாகத்தான் எமது அரசியல் இருந்து வருகிறது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. இதுதான் புத்திஜீவித்தன அரசியலின் சீத்துவமாகும்.



இந்த நிலையில்தான் வடமாகாண சபைத் தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது புத்திஜீவித்தன அரசியலுக்காக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் என்ற தகுதிப்பாட்டுடன் திரு. சி.வி.விக்கினேஸ்வரன் அவர்களை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தக்கு இறக்குமதி செய்தனர் வடமாகாண மக்களும் பெரும் எதிர்பார்ப்புடன் அவரை முதலமைச்சர் ஆக்கினார்கள்.

மகாணசபைக்குரிய அத்தனை அதிகாரங்களையும் உச்சளவில் பயன்படுத்தி இலங்கையின் மாகாணசபை ஆட்சிமுறைக்கு ஒரு முன்னுதாரணமாக வடமாகாணசபையினை எடுத்துக்காட்டுவார், வடமாகாண மக்களும் உச்ச பயனைப் பெறுவார்கள் என்ற மக்களுடைய எதிர்பார்ப்புக்கு ஏமாற்றத்தையளித்து தமிழர் தலைமைத்துவத்தை எவ்வாறு கைப்பற்றலாம் என்பதில்தான் கவனமாக இருந்தார் என்பதை அவருடைய மாகாணசபை நடவடிக்கைகள் காட்டியிருக்கின்றன. கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த பிள்ளையான் எனும் சிவ.சந்திரகாந்தன் செய்த சேவையில் ஒரு சிறு பங்கையாவது செய்யமுடியாது தீர்மானங்களை மட்டும் நிறைவேற்றத் தெரிந்த ஒரு முதலமைச்சராகவே கடைசிவரை பதவியில் இருந்தார்.

வடமாகாண முதலமைச்சராக இருந்த போது கிழக்கைப் பற்றி சிறிதேனும் கவலைப்படாதவரும் செயல்திறனற்றவருமான திரு. சி.வி. விக்கினேஸ்வரன் அவர்களைத்தான் தங்களுடைய பதவி ஆசைகளுக்காக மட்டக்களப்பிலுள்ள சிலர் புத்திஜீவித்தன அரசியலுக்காக மட்டக்களப்புக்கு இறக்குமதி செய்துள்ளார்கள். இவ்வாறு இறக்குமதி செய்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் ஒதுக்கப்பட்ட பின்பு ஆனந்தசங்கரி அவர்களுடைய தமிழர் விடுதலைக் கூட்டணியில் சேர்ந்து உறுப்பினர் பதவிகளைப் பெற்றுக்கொண்டிருந்தாலும் அவர்களின் பாராளுமன்றப் பெருங்கனவுக்கு ஆனந்தசங்கரி அவர்களுடைய கடித அரசியல் பொருத்தமானது அல்ல என்பதை உணர்ந்து குரங்கு போல் விக்கினேஸ்வரன் அவர்களைத் தாவிப்பிடித்திருக்கிறார்கள். தாவிப்பிடித்த கையுடன் விக்கினேஸ்வரப் பெருமானை மட்டக்களப்பு எங்கும் வீதி உலாக் கொண்டு சென்றுள்ளனர். அவரும் மட்டு வாக்காளர்களுக்கு அருள்பாலித்து மட்டக்களப்பு மக்களை மீட்கும் மீட்பராக தன்னை வெளிக்காட்டிச் சென்றுள்ளார்.

'தான் போக வழியக் காணலையாம் தவில் போலவாம் மாராப்பு' என்றொரு பழமொழி உண்டு அது போல் கௌரவ முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் அவர்கள் முதலில் தனது 'தமிழ் மக்கள் கூட்டணியை' வடக்கில் ஸ்திரப்படுத்தி அதனூடாக வடமாகாண அடிமட்ட மக்களுடைய பிரச்சினைகள், தேவைகள் என்பவற்றுக்கு தீர்வைக் கண்டு அந்த மக்களை திருப்திப்படுத்திய பின் தனது வியாபாரத்தை கிழக்கில் ஆரம்பிப்பது பொருத்தமானதாக இருக்கும். அதை விடுத்து அவரை நம்பி முதலமைச்சராக்கிய மக்களை நட்டாற்றில் விட்டு அந்த மக்களின் பெயரால் வேறுபகுதிகளில் அரசியல் வியாபாரம் செய்யமுனைவது அந்த மக்களை விற்றுப் பிழைக்கும் பிழைப்பென்பதை அவர் விளங்கிக் கொள்ள வேண்டும்.

யாழ் மேட்டுக்குடி அரசியல்வாதிகளின் பாதபிம்பங்களை பூசை செய்து அந்தப் புனித நீரை அருந்தி குளித்து மகிழும் மண்ணின் மைந்தர்கள் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது தமிழர் அரசியலில் தலைமைத்துவம் வகித்த புத்திஜீவிகள் எனக் கூறப்படுபவர்கள் அனைவரும் மேலாதிக்க சமூகப் பிரதிநிதிகளே தவிர சாதாரண மக்களின் பிரதிநிதிகள் அல்ல. அவர்கள் கட்டிக்காத்த அரசியல் நலன்கள் எல்லாம் அந்த மேட்டுக்குடியினருக்கானதேயாகும். இதனாலேயே தமிழர்களுடைய நியாயமான கோரிக்கைகளும் போராட்டங்களும் தோற்றுப்போனதுமாகும்.

**எழுவான் வேலன்**

இந்த வரலாற்று அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு இன்று சாதாரண தமிழ் மக்கள் அனைவரும் முதலில் தங்களுடைய மேட்டுக்குடி அரசியலுக்கு எதிராக அணிதிரள்வதும் அதனை வெற்றி கொள்வதும் முதற் தேவையாக இருக்கின்றது.

'ஆதிக்கத்தை நோக்கி வளர்ந்து வரும் எந்தக் குழுவிற்கும் மிகவும் முக்கியமான தன்மைகளில் ஒன்றாக இருப்பது, மரபு ரீதியான அறிவுஜீவிகளை 'சிந்தாந்த ரீதியாக' வென்றெடுத்து தன்னிடம் ஈர்த்துக் கொள்ளும் அதன் போராட்டமே, தனது சொந்த உயிரோட்டமான அறிவுஜீவிகளை விரிவாக்குவதிலும் எந்த அளவிற்கு சம்மந்தப்பட்ட குழு வெற்றியடைகிறதோ, அந்தளவிற்கு மேற்படி ஈர்த்தலும் வெற்றி கொள்ளலும் விரைவு படுத்தப்பட்டு, சக்தி மிக்கதாய் அவை இருக்கின்றன' என்பார் அந்தோனியோ கிராம்சி.

எனவே புத்திஜீவி, கௌரவமான தொழிலில் இருந்தவர் சமூக அந்தஸ்துள்ளவர் என்பதற்காக சமூக நல நாட்டமும் அற்று சித்தாந்தத் தெளிவும் அற்று இருப்பவர்கள், தமிழ்த் தேசிய மந்திர உச்சாடனத்தினை உரக்கச் சொல்வதினால் மட்டும் அவர்களை எமது தலைவர்களாக்கி எமது பேரால் அவர்களுடைய வாழ்க்கையை ஒளிமயமாக்கப் போகின்றோமா அல்லது சாதாரண தமிழ் மக்கள் நலனும் செயற்திறனும் கொண்டவர்களை அடையாளம் கண்டு அவர்களைத் தலைவர்களாக்கி மேலே சுட்டிக்காட்டிய இந்தப் புத்திஜீவிகளை எமது பக்கம் ஈர்த்தெடுத்து வெற்றிகொண்டு உண்மையான மக்கள் அரசியலைச் செய்யப் போகின்றோமா என்பதனை புத்திஜீவித்தன அரசியல் பேசுவர்கள் சிந்திப்பது அவசியமானதாகும். இல்லாவிட்டால் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பது போல் காலத்துக்குக் காலம் அவதாரமெடுத்து கிழக்கில் எழுந்தருளுபவர்களுக்கு பாதபூஜை செய்து பணி செய்து கிடப்பதை தவிர்க்கமுடியாது.

## இல்மனைட் அரசியல்...

# உயிர் கொடுத்து காத்த மண் வீணாய் போவதா?

மட்டக்களப்பு மாவட்டம் கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் இல்மனைற் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். ஒரு தனியார் கம்பனியே இதன் முதலீட்டாளர் ஆகும்.

மேற்படி கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கதிரவெளி, புச்சாகேணி, புதூர், நாகபுரம், பால்சேனை, வெருகல், கல்லரிப்பு பகுதிகளை குறிவைத்து மேற்படி திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தமது தொழிற்சாலையை குறி வைத்து சுமார் 48 கிலோ மீட்டர் நீளமான கரையோர பகுதியை இந்த நிறுவனத்தினர் கையகப்படுத்தியுள்ளனர்.

வாகரையில் உருவாகி வரும் இத்தொழிற்சாலையின் இல்மனைட் மண் அகழ்வு வேலைகள் மக்கள் வாழும் பிரதேசத்தில்

அமையவிருப்பதானால் அதன் காரணமாக பாதிக்கப்படப்போகும் மக்களிடம் அது பற்றிய தகவல்களைப் பெறும் நோக்கில் வினவிய போது, தோட்டச் செய்கை மற்றும் ஆரம்ப பாடசாலை அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் என பொய்யான தகவல்களை வழங்கியே இக்காணிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதை அறியமுடிந்தது. அத்தோடு கூடவே இந்தக் காணிகள் ஒப்பக்காணிகள் என்பதால் அக்காணிகளை விற்பனை செய்யமுன்வராவிடின் அவற்றை சுவீகரித்து அரசகாணி ஆகிவிடுவோம் என அச்சுறுத்தியும் காணிகள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் சிலர் தெரிவிக்கின்றனர். இதன்காரணமாக இக்காணிகள் அபகரிப்பின் இடைத்தரகர்களாக அரச அதிகாரிகள் ஈடுபட்டதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. எனவே இந்த முதலாளிகளின் மக்கள் விரோத செயற்பாடுகளில் பெருமளவான லஞ்சத் தொகையும் கைமாறியிருக்கலாம் என சந்தேகங்கள் வலுக்கின்றன.



இத்திட்டம் அமுலாக்கப்படுமிடத்து கடலோர மீன்பிடியை மட்டுமே நம்பி வாழும் நூற்றுக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரம் நேரடியாக பாதிப்புறும் அபாயம் உள்ளது. உடனடியாகவே ஐந்து கரைவலைப்பாடுகளும் 150 குடும்பங்களும் தொழிலை இழக்க நேரிடும். வானுயர வளர்ந்துள்ள தென்னை மரங்கள் அழியும் ஆபத்துகள் உள்ளன. கனிய மணல் அகழ்வின்போது கடலோர தாவரங்கள் அகற்றப்படுவதனால் வெப்பம் நேரடியாக பூமியைத்தாக்குவதுடன் வெளிவரும் குளிர் காற்று வெப்பமாக மாறி உள்ளூர் மழையின் அளவிலும் தன்மையிலும் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தும். மண் அகழ்வு நேரிடையாக இடம்பெறுவதானால் நிலத்தடியில் கடல் நீர் உட்புகுந்து அண்மைய கிராமங்களின் நிலத்தடிநீர் உப்பாக மாறும் அபாயம் உள்ளது. இதனால் பல்லாயிரம் குடும்பங்கள் குடிநீர் பற்றாக்குறையை எதிர் கொள்ள நேரிடும். .

தாது மணல் பிரித்தெடுக்கும் காரணத்தினால் இரும்பு குளோரைடு மற்றும் அமிலக்கழிவுகள் சுற்றியுள்ள நிலத்தையும் நிலத்தடி நீரையும் மிக மோசமாக மாசுபடுத்தும், ஆலையில் பிரித்தெடுக்கப்படும் ஜிர்க்கான் கனிமம் ஆலையை சுற்றி இருபது கிலோ மீற்றர் தூரம் வரை கதிர்வீச்சுக்களை பரவைச்செய்யும். இதனால் சுற்று சூழலில் வாழும் மக்களும் வீட்டு பிராணிகளும்,விவசாய கால்நடைகளும் மரபணு நோய்களுக்கும் பல்வேறு வகை புற்றுநோய்களுக்கும் நுரையீரல் பாதிப்பு,சுவாச குழாய் பிரச்சனைகள் போன்றவற்றுக்கும் ஆளாக வேண்டி வரும். சல்பர் டை ஆக்சைடு உள்ளூர் அளவில் கடும் பாதிப்பை ஏற்படுத்தும். அது அந்தப் பகுதியில் அமில மழையை ஏற்படுத்தும். ஆலையில் இருந்து வெளியேறும் திடக்கழிவுகள் நிலத்தையும் நேர் நிலைகளையும் கடலையும் நஞ்சாக்கும்.

இல்மனைட் தொழிற்சாலையிலிருந்து உற்பத்தி முறையில் வெளியேறும் மற்ற முக்கியப் பொருள்கள்: ஹைட்ரஜன் குளோரைடு, ஹைட்ரோ குளோரிக் அமிலம், குளோரின் வாயு, அமிலத் தன்மையுள்ள சகதி, சல்பர் டை ஆக்சைடு, கார்பன் டை ஆக்சைடு, கன உலோகங்கள் நிறைந்த திடக்கழிவுகள், அமிலத் தன்மையுள்ள திரவக் கழிவுகள் மற்றும் காற்றில் மிதக்கும் திடப்பொருள் துகள்கள். டைட்டானியம் டை ஆக்சைடு உற்பத்தியில் வெளியாகும் கழிவுகளில் அலுமினியம், ஆண்டிமணி, ஈயம், மோலிப்டனும் போன்றவை மிகக்குறைந்த

**அறுமக்குட்டிபோடி**

அளவில் இருக்கும்.

இவை நுரையீரலில் மிகக்குறைந்த அளவு நுழைந்தால்கூட, நீண்ட காலப்போக்கில், சரிசெய்ய முடியாத இழப்புகளை ஏற்படுத்தக்கூடியவை. சல்பர் டை ஆக்சைடு உள்ளூர் அளவில் கடும் பாதிப்பை ஏற்படுத்தும். இவை இது குறித்த பொதுவான ஆய்வாளர்களின் கருத்து.

இந்திய கேரளாவில் சவரா என்னும் ஊரில் கேரளா மினரல் ரூ மெட்டல் என்னும் நிறுவனம் டைட்டானியம் ஆலையை நடத்தி வருகிறது. அந்த ஆலையிலிருந்து வெளியேறிய கழிவுகள் நிலத்தடி நீரை மாசுபடுத்திவிட்டன என்று உச்ச நீதி மன்றக் கண்காணிப்புக் குழு 2004இல் குற்றஞ்சாட்டியது. தற்போது கேரளாவில் அந்த ஆலையைச் சுற்றியுள்ள ஊர்களிலுள்ள மக்கள் ஆலை கொண்டுவந்து வினியோகிக்கும் நீரை நம்பியே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

குளோரைடு முறையின் மூலம் டைஆக்சினும் (dioxins) ஃபுரானும் (furans) உற்பத்தியாகும் என்பதே. குளோரைடு முறை இந்த விஷ வாயுக்களையும் உற்பத்தி செய்யும் என்று ஜக்கிய நாட்டுச் சபையின் சுற்றுச்சூழல் திட்டம் கூறுகிறது. அறிவியலின் மிகக்கொடூரமான நச்சுத் தன்மைகொண்ட 100 வேதிப்பொருள்களின் பட்டியலில் இந்த இரண்டு பொருள்களும் முக்கியமானவையாகும். எனவே இந்த இல்மனைட் தொழிற்சாலை நிறுவும் திட்டம் முற்றாக தடை செய்யப்படவேண்டும். இயற்கையை நம்பி வாழும் எமது மக்களின் வாழ்வாதாரங்கள் பாதுகாக்கப்படவேண்டும். அபிவிருத்தி என்னும் பெயரில் சுற்று சூழலும் சமூக பாதுகாப்பும் அலட்சியம் செய்யப்படுவதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த இல்மனைட் ஆலையின் பெயரில் இவ்வாண்டு ஆரம்பம் முதல் பல்வேறு ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்பு பேரணிகளும் நடந்து வருகின்றன. ஆனபோதிலும் இவ்வார்ப்பாட்டங்களில் பெருந்தொகையான மக்கள் பங்கெடுக்காமை வருந்தத்தக்கதாகும். குறித்த சில அரசியல்வாதிகளின் திட்டமிடலின் பெயரிலேயே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஏனைய பிரதேச மக்கள் இதன்பொருட்டு கூடிய கவனம் கொள்ளவில்லை. சூழலியலாளர்கள், புத்திஜீவிகள், மனித உரிமையாளர்கள் எழுத்தாளர்கள், என்கின்ற எந்த பிரிவினரின் பிரசன்னங்களையும் இந்த ஆர்ப்பாட்டங்களில் காண முடியவில்லை.

எனவே சில அரசியல் எதிர்ப்பு அரசியல் ஊடாக தமது விலாசங்களை பெரிதுபடுத்திக்கொள்வதை தவிர இவர்களின் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களால் வேறு எதுவும் நடக்கப்போவதில்லை. ஒரு சில படங்களையும் செய்திகளையும் பிரசுரிப்பதோடு சம்மந்தப்பட்ட அரசியல்வாதிகளின் கடமை முடிந்து விடுகின்றது. எனவே மக்கள் திரள் (masse mouvement) பங்கெடுக்காத எப்போராட்டங்களும் வெற்றிபெறுவது சாத்தியமில்லை. அதிலும் சிலர் இதனை தெரிந்து கொண்டே திட்டமிட்டு கிழக்கை குறிவைத்து தமது அரசியல் கட்சிகளை அறிமுகம் செய்ய இதுபோன்ற விடயங்களை கையிலெடுப்பது நடக்கின்றது. கறுப்புச்சட்டையுடன் இதற்காகவே வடக்கிலிருந்து இளைஞர்கள் குழாம்



# இது கூட்டுக்களின் காலம்...

மப்பும் மந்தாரமுமாக இருந்த நாட்டின் அரசியல் சூழல், காலநிலை அறிக்கை போல தேர்தலுக்கான அறிகுறிகள் தென்பட, கூட்டுக்களின் காலமாக இது உருவெடுக்கின்றது. தென்னிலங்கை ,வடக்கு,கிழக்கு,மலையகம்,முஸ்லிம்கள் என்று எங்கும் தேர்தலை மையம் கொண்டு கூட்டுக்களுக்கான பேரம் பேசல்களும் கொடுக்கல் வாங்கல்களும் திரைமறைவிலும் நேரடியாகவும் தொடங்கிவிட்டன.

அதேவேளை அவசியமான கூட்டுக்கள் கூட ஒன்பதோடு பத்தாக அள்ளுப்பட்டுச் செல்லக்கூடிய ஆபத்தும் தோன்றியுள்ளது. உண்மையில் கூட்டு என்பது என்ன? மக்கள் நலனுக்காக தங்கள் தனித்துவங்கள் சிலவற்றை ஒதுக்கி மக்கள் நலனை முன்னிறுத்துவதே நியாயமான கூட்டுக்கான அடிப்படையாக முடியும்.

## தென்னிலங்கைக் கூட்டு:

இங்கு ஏலவே ஐ.தே.கட்சியை பிரதானமாகக் கொண்டு ஐக்கியதேசிய முன்னனிக் கூட்டு ஒன்று இயங்கிக் கொண்டிருக்கிறது. இம்முன்னனியில் சில கட்சிகள் நேரடியாகவும் சில மறைமுகமாகவும் சேர்ந்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதற்கு எதிரான கூட்டு ஒன்று மொட்டை மையம்கொண்டு மகிந்த தலைமையில் தயாராகி சில பேரம்பேசல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவை தென்னிலங்கை கூட்டுக்கள் என்றாலும் நாட்டின் தலை விதியை தீர்மானிக்கின்ற கூட்டுக்களாக இவைகளே அமையும்.

இதனை விடஜே.வி.பி மூன்றாவது கூட்டை அமைக்க முயல்கிறது. எனினும் இதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவே.

## வடக்கை மையம் கொண்ட கூட்டு:

த.தே.கூட்டமைப்பு பிச்சல் பிடுங்கல்களுடன் ஒரு கூட்டாக உள்ள அதேவேளை,சி.வி.விக்னேஸ்வரனை மையம் கொண்டு மற்றுமொரு கூட்டணிக்கான வேலைகள் நடை பெறுகின்றன. விக்கி, கஜேந்திரகுமார்,சுரேஷ்,அருந்தவபாலன்,ஐங்கரநேசன், அனந்தி ஆகியோர் இணையும் பட்சத்தில்தான் அக்கூட்டு பூரணத்துவம் பெற்றதாக அமையும்.

இதனை விட தனியான வாக்குவங்கியைக் கொண்டுள்ள டக்ளஸ் அவர்கள் யாருடனும் கூட்டுச்சேர வாய்ப்பில்லை.

அங்கே நடைபெறும் இழுபறிகளைப் பார்க்கும்போது கூட்டை பூரணப்படுத்த வாய்ப்பில்லை போலவே தென்படுகின்றது.

கணிசமான வாக்குகளைக் கொண்டுள்ள கஜேந்திரகுமார் அணியின் நிபந்தனைகள் தான் முதல் முட்டுக்கட்டையாக உள்ளது. அதனையும் தாண்டி கூட்டு அமையுமாயின் வடக்கில் குறிப்பாக யாழில் த.தே.கூட்டமைப்பு பாரிய சரிவைச் சந்திக்கும். வவுனியாவில் த.தே.ம.முன்னனியை விட சுரேஷ் அணி கூடுதலான வாக்கு வங்கியைக் கொண்டுள்ளமையை கஜேந்திரகுமார் கவனம் கொள்ள வேண்டும்.

## மலையகத்தில் கூட்டு

மலையகத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியும் (ஐ.தே.மு.சார்பு), இ.தொ.கா. கூட்டணியும் (மகிந்த சார்பு) உள்ளன. எனினும் அவைகளிலும் ஒட்டு வெட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. த.மு.போ.கூட்டணியிடம் அமைச்சர் மனோவிடம் மலையக ஈரோஸ் பிரிவு பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது. த.மு.போ.கூட்டணியிலிருந்து அமைச்சர் ராதா கிருஸ்ணன் சார்பான ம.ம.மு.,இ.தொ.காவுடன் சாய்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக தகவல்கள் கசிகின்றன. இ.தொ.கா.தனது கூட்டணியை புதுப்பிக்க பலருக்கு அழைப்பு விடுத்த வண்ணம் உள்ளது.

இதில் புதிதாக வடக்கில் இயங்கும் ஜனநாயக போராளிகள் கட்சி இணைந்துள்ளது. வடக்கில் கிழக்கில் முன்னால் போராளிகளைக் கொண்டுள்ள இக்கட்சி வடக்கு கிழக்கில் பூரணமான வேலைத்திட்டத்தை முன்னெடுக்காதவர்கள் மலையகத்தில் கூட்டிணைந்து என்ன செய்யப்போகின்றார்கள் என்ற கேள்வியும் எழுகின்ற அதேவேளை இது பெயரளவிலான கூட்டாகவே இருக்கும்.

எனினும் மலையக கட்சிகள் எல்லாம் ஒன்று சேர வாய்ப்பில்லை. அது மறைந்த அமைச்சர் சந்திரசேகரன் காலத்துடன் மறைந்து விட்டது. இனி இரு முகாமாகவே தொழிற்படும். இ.தொ.கா.எதிர் த.மு.போ.கூட்டணி.

## முஸ்லிம் கட்சிகள்:

முஸ்லிம் கட்சிகள் பல கூறுகளாக பிரிவுண்டுள்ளன. ஹக்கிம் அணி,ரிசாத் அணி,அதாவுல்லா அணி, ஹசனலி அணி,இதனைவிட ஹிஸ்புல்லாஹ் (ஸ்ரீலங்கா சு.க.),ஐ.தே.க.அணி என்று பல அணிகள் காணப்படினும்,ஏப்ரல் 21 நிகழ்வு அவர்களை கூடுமானவரை ஒன்று சேர்த்து விட்டது. மிக விரைவாக புதிய முஸ்லிம் கூட்டு முன்னணி ஒன்றை நாம் எதிர்பார்க்கலாம் என்று சில வட்டாரங்கள் கூறுகின்றன.

## கிழக்கை மையம் கொள்ளும் கூட்டு:



உண்மையில் கிழக்கில் தான் ஒரு புதிய கூட்டு முன்னனியின் தேவைப்பாடும் அவசியமும் அதிகமாகக் காணப்படுகின்றது. சில வருடங்களாக கிழக்குத் தமிழர் ஒன்றியம் அதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்தது. கடைசிக்கட்டத்தில் உட்கட்சி குத்து வெட்டில் அது பின்னடைவை சந்தித்துள்ளது. கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு எனும் மற்றுமொரு அணி இப்பணியை தற்போது முன்னெடுத்து இருக்கிறது. அதற்கான கலந்துரையாடல் ஒன்று மட்டக்களப்பில் நடந்துள்ளது. இதனைவிட சில தனிநபர் முயற்சிகளும் ஆங்காங்கே நடைபெறுகிறன.

இதுவரை காலமும் ததேகூட்டமைப்பையே ஆதரித்து வந்த மட்டக்களப்பை மையமாக கொண்ட கிழக்கு, பல அதிருப்திகளுக்கும் வெறுப்புகளுக்கும் ஆளாகிக் கொண்டிருக்கிறது. அதன் வெளிப்பாடுதான் புதிய கூட்டின் அவசியத் தேவைப்பாடு.

த.தே.கூ. இக்கூட்டு முன்னணிக்குள் வருவதற்கான வாய்ப்புக்கள் குறைவே,அப்படி வந்தாலும் தேர்தலை மையம் கொண்ட ஆசனப்பங்கீட்டின் போது நிச்சயம் உடைவு ஏற்படும். எதிர் முகாமிலுள்ள அனைவரையும் ஒன்று சேர்ப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உண்டு.

மட்டக்களப்பில் கணிசமான வாக்கு வங்கியைக் கொண்டுள்ள பிள்ளையான் அணியுடன்,அமல் அணி,துரைரெட்ணம் அணி, ஜெயானந்த மூர்த்தி+வெள்ளிமலை அணி,கருணா அணி,கணேசமூர்த்தி அணி, கிழக்குத் தமிழர் ஒன்றியம்,தமிழ் உணர்வாளர் அணி என்று விடுபட்ட ஏனைய அமைப்புக்களையும் ஒன்று சேர்க்கும் பட்சத்தில் ஒரு பலமான கிழக்கு தமிழர் கூட்டு முன்னனி ஒன்று உருவாகும்.

**வ.ச.முரளிசேகரன்**

எங்கும் கூட்டு எனும் போது ஏதோ பெரிதாக கட்சிக் கொள்கைகளை முன்னிலைப்படுத்தி குழப்பங்களை உண்டுபண்ண சிலர் வெளிக்கிடுவார்கள். இலங்கையில் எந்தக்கட்சி தனது கொள்கைகளை நூறுவீதம் கடைப்பிடிக்கிறது. ஒரு கட்சியின் கொள்கைகளைப்போல் இன்னுமொரு கட்சியின் கொள்கைகள் இருப்பதில்லையே,அப்படி இருக்குமாயின் இரண்டாவது கட்சி தேவையில்லையே. ஒவ்வொரு கட்சிகளும் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் கொண்டிருக்கும். இங்கு வேற்றுமைகளை இரண்டாம் பட்சமாக்கி,ஒற்றுமைகளை முன்னிலைப்படுத்தியே கூட்டுக்கள் அமைகின்றன.

உண்மையில் மக்கள் நலனை முன்னிறுத்துவோமாயின் இக்கூட்டுக்கள் வெற்றி பெறும். தேர்தல் திருவிழா முடியும் வரை கூட்டுக்களின் திருவிழாவும் தொடரும். மக்கள் கூட்டுக்கள் மட்டும் நின்று நிலைக்கும்.

# 45 நாடுகளை சேர்ந்த சுற்றுலா பயணிகளுக்கு இலவச விசா நடைமுறை

இலங்கைக்கு வந்தவுடன் இலவசமாக கட்டணம் எதுவுமின்றி விசாவை பெற்றுக்கொள்வதற்கான சலுகையை அரசாங்கம் அறிவித்துள்ளது. இது தொடர்பான தீர்மானம் அமைச்சரவை கூட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்டது.

grand free on - arrival visa நடைமுறையை முன்னர் 35 நாடுகளுக்கு மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துக்கு பின்னர் பின்னடைவை கண்டிருந்த சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் தற்போது இந்த சலுகையை 45 நாடுகளுக்கு விரிவுப்படுத்தியுள்ளது.

இந்த சலுகை நடைமுறை கடந்த மே மாதம் அமுல்படுத்தபடவிருந்தது. உயிர்த்த ஞாயிறு சம்பவத்தை அடுத்து இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. சுற்றுலா தொழிந்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க இந்த நாடுகள் தொடர்பான விபரங்களை அமைச்சரவையில் சமர்பித்தார்.

இந்த நடைமுறை ஆகஸ்ட் 1 முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். விசா நடைமுறை பின்வரும் நாடுகளுக்கு ஏற்புடையதாகும்.

| | |
|---|---|
| அவுஸ்ரேலியா | ஒஸ்ரியா |
| பெல்ஜியம் | பல்கேரியா |
| கம்போடியா | கனடா |
| சீனா | சைப்பிரஸ் |
| டென்மார்க் | எஸ்டோனியா |
| பின்லாந்து | பிரான்ஸ் |
| ஜேர்மனி | கிறீஸ் |
| கங்கேரி | ஐஸ்லாந்து |
| இந்தியா | அயர்லாந்து |
| இத்தால | ஜப்பான் |
| லத்வியா | லக்சம்பேர்க் |
| மல்டா | மலேசியா |
| நெதர்லாந்து | நோர்வே |
| நியசிலாந்து | பிலிப்பைன்ஸ் |
| செக்குடியரசு | போலந்து |
| போர்த்துகல் | லிதுவேனியா |
| ரோமனியா | ரஷ்யா |
| சிங்கப்பூர் | ஸ்லோவீனியா |
| தென்கொரியா | குரோஷியா |
| ஸ்பெயின் | சுவீடன் |
| லத்வியா | சுவிஸ்லாந்து |
| தாய்லாந்து | ஐக்கியராச்சியம் |
| ஐக்கியஅமெரிக்கா | |

தொடர்ச்சி...

## அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு

கொடுப்பனவு வியாழன் முதல் மாதாந்த சம்பளத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்திருக்கிருக்கின்றது.

இந்த சம்பள அதிகரிப்புக்கென அரசாங்கம் 2,700 மில்லியனுக்கும் அதிகமான நிதியை செலவிட்டிருக்கிறது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது எதிர்வரும் ஜனவரி மாதத்தில் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் 107 சதவீதத்தால் அதிகரிக்கும்.

ஜூலை மாதம் முதல் அமுலாகும், அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்புக்கும், ஓய்வூதிய கொடுப்பனவுக்கும் ஆயிரம் பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி செலவிடப்பட இருக்கிறது.

# படுவான் திசையில்


பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## படுவான்கரையிலும் தமிழுக்கு அழிவா?

தமிழ் கடவுள் தாந்தாமலை முருகன் கொடியேற்றமும் நேற்றுதான் இடம்பெற்றது. தமிழ் முருகன் வீற்றிருக்கும் தமிழ்ப் பகுதியில் தமிழ்மொழிச் சொற்களுடன் பதாதைகள் காட்சிக் கொடுக்காமை மிக கவலையளிப்பதாக கூறுகிறார் பாலிப்போடி.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பரந்து கிடக்கின்ற பெரும்பகுதியாகிய படுவான்கரைப்பகுதியில் ஒரு காலம் தமிழ் மணம் வீசியது. பிள்ளைகளுக்கான பெயர்களும், வர்த்தக நிலையங்களின் பெயர்களும் கலப்பின்றிய தூய தமிழில் காட்சி கொடுத்தமை வரலாறு. இன்றெல்லாம், தமிழின் முக்கியத்துவமும் குறைந்து போய்விட்டதோ?, என்ற சந்தேகம் பாலிப்போடிக்கு ஏற்பட்டிருந்தது. இந்த சந்தேகம் ஏற்படுவதற்கு பல காரணங்களை கந்தாமியிடம் முன்வைக்கிறார் பாலிப்போடி.

செம்மொழி' அந்தஸ்து கொண்டது எம் 'தமிழ்மொழி' என்கின்ற போது, தமிழ்மொழியை பேசுகின்றவர்கள் அதன்பால் பெருமை கொள்கின்றனர், மகிழ்ச்சி கொள்கின்றனர். அவ்வாறு பெருமிதம் கொள்வதில் அர்த்தமுள்ளது உண்மைதான். உலகிலே பல ஆயிரக்கணக்கான மொழிகள் உள்ள போதும், ஒருசில மொழிகளுக்கே செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இதனால்தான் தமிழினம் பெருமையுடன் கூடிய விருப்பும், மகிழ்ச்சியும் கொள்வதோடு தலைநிமிர்ந்து தம் மொழியைக் கூறுகின்றனர். அதேவேளை அழிவடைந்து செல்லும் மொழிகளுள் தமிழும் ஒன்று என்று கூறுகின்ற போதுதான் இந்த சந்தேகம் ஏற்பட்டிருக்கின்றது.



தமிழ்மொழி அழிவடைந்து செல்கின்றதென்பது உண்மையா? என்பதனை தமிழ் மொழியை பேசுகின்ற அனைவரும், அவர்களிடத்து உள்ளக் கிடக்கையில் கேட்க வேண்டிய முதற் கேள்வியாக உள்ளது. ஏனெனில் சமீப காலமாக தமிழ்மொழி பேசுகின்ற ஒவ்வொருவருமே தமிழை அழித்துக் கொண்டிருக்கின்றனர். இலங்கை நாட்டில் தமிழ்மொழியும் அரசகரும மொழியாக இருக்கின்றபோதும், அரச உட்பட அனைத்து அலுவலங்களிலும் அதற்கான முழுமையான அந்தஸ்து வழங்கப்பட்டதாக தெரியவில்லை. இன்றும் போக்குவரத்தின் போது தவறிழைக்கும் சாரதிகளுக்கு, தமிழ் பிரதேசங்களிலே சகோதரமொழியில் எழுதப்பட்ட குற்றப்பத்திரம் வழங்கப்படுகின்றமை இவ்விடத்தில் நினைவுகூரத்தக்கது.




தமிழை மற்றவர்கள் பல சந்தர்ப்பங்களில் கேவலப்படுத்துகின்றனர் என நாம் கூறிக்கொண்டிருக்கின்றோம். அவற்றினை தட்டிக்கேட்க வேண்டும். ஆனால் நாம் அதனை செய்கின்றோமா? அதனால் எம் மொழியை காப்பாற்றுகின்றோமா? என்பது குறித்தும் அவதானிக்க வேண்டியுள்ளது.

பிறந்த குழந்தைக்கு பெயர் சூட்டுதலில் இருந்து கடைக்கு பெயர் வைக்கும் வரைக்கும் தமிழ், தமிழ்மொழி பேசுபவர்களினால் அழிக்கப்பட்டு வருகின்றமையை நாம் கண்கூடாக பார்த்து வருகின்றோம். தமிழ்மொழி பேசுபவர்கள் அன்றாடம் பேசும் வார்த்தைகளிலிருந்து, எழுதும் சொற்கள்வரை வேற்றுமொழி கலந்தே பிரயோகிக்கின்றனர். தமிழ்மொழியின் அழிவுக்கு பெரும்பாலும் வேற்று மொழியின் ஆதிக்கம்தான் காரணமாகலாம் என்பதனை தற்கால வார்த்தைப் பிரயோகங்களும், எழுத்துப் பயன்பாடும் நிரூபணமாக்குகின்றன.

தாய்மொழியே எம்மொழி, நல்மொழி, நாகரீக மொழி எனக் கூறி, பல மொழிகளை அறிந்து வைத்திருந்தாலும் கூட தமிழ்மொழியை மட்டுமே பேசுகின்ற பலர் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றமை தமிழ்மொழியை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு ஊன்றுகோல் என்றே குறிப்பிடலாம். தமிழ் மொழியை தாய்மொழியாக கொண்ட இருவர் தம்மொழியில் பேசாமல் ஆங்கிலத்தில் பேசி அவர்கள் மகிழ்ச்சி கொள்கின்ற வேதனையான சம்பவங்களும் எம்மத்தியில் இடம்பெறத்தான் செய்கின்றன. இது குறித்து அவர்கள் வெட்கித் தலைகுனியாமல் மகிழ்ச்சி கொள்வது கசப்பானதொன்றுதான். எனக்கூறிய பாலிப்போடி வர்த்தகர்கள் தமிழில் பெயர் சூட்டாதது, தமிழை அழித்துக்கும் செயற்பாடே.

தமிழர் பண்பாட்டில் குழந்தை ஒன்று பிறந்தால், நாள், நட்சத்திரம், இராசி பார்த்து தமிழில் பெயர் சூட்டிய காலம் ஓடி ஒழிந்துள்ளமை போன்று, பால்காய்ச்சி, வழிபாடாற்றி, உறவினர்களை அழைத்து தமிழில் பெயர் சூட்டி திறக்கப்பட்ட வியாபார நிலையங்கள் மறைந்து, தமிழ்பேசும் மக்கள் வாழ்கின்ற இடங்களில் ஆங்கிலமொழியில் பெயர் சூட்டுகின்ற பண்பாடு இலங்கை நாட்டிலே உருவாகி வருகின்றது.

வன்பொருட்கள் விற்பனை செய்யப்படும் விற்பனை நிலையங்களுக்கு ஹாட்வெயார் என்றும், விற்பனைக்கூடம் என்பதற்கு பதிலாக ஸ்ரோர் என்றும், பல்பொருள் விற்பனை நிலையம் என்பதற்கு பதிலாக மல்ரிசொப் என்றும், உணவகம் என்பதற்கு பதிலாக ஹோட்டல் எனவும், நகையகம் என்பதற்கு பதிலாக ஜூவலரி எனவும், தொலைபேசி விற்பனை நிலையம் என்பதற்கு பதிலாக மொபைல்சொப் எனவும், தொடர்பு நிலையம் என்பதற்கு பதிலாக கொமினிகேசன் எனவும், ஆடை விற்பனை நிலையம் என்பதற்கு பதிலாக டெக்ஸ் ரெய்ல்ஸ் எனவும், ஆடம்பர விற்பனை நிலையம் என்பதற்கு பதிலாக

**படுவான் பாலகன்**

பென்சி ஹவுஸ் எனவும், பழுதுபார்த்தல் நிலையத்திற்கு பதிலாக சேவிஸ் சென்றர் எனவும், வெதுப்பகம் என்பதற்கு பதிலாக பேக்கரி எனவும், புத்தக நிலையத்திற்கு பதிலாக வுக் சென்றர் எனவும் தமிழ் மொழிபேசும் வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களுக்கு பெயர் சூட்டுகின்றனர். இதுமட்டுமில்லாது இன்னும் பல தமிழ்மொழியில் அல்லாத ஆங்கிலச் சொற்களைக் கொண்டு தமிழ் எழுத்தினால் எழுதி பெயர் சூட்டியிருக்கின்றனர். ஆங்கிலப்பதத்தில் இதனை குறிப்பிட்டு அதனை தமிழ் எழுத்தினாலும் இப்பெயர்களை சூட்டியுள்ளமை வேதனையானதொன்றுதான். இதனால் தமிழ்ப் பதம் என்பதே தமிழினத்துக்கு மறந்துபோகின்றதல்லவா? இதனை யாரும் சிந்தித்துப் பார்த்ததுண்டா? என்கிறார் பாலிப்போடி.

வியாபார நிலையங்களை ஆங்கிலத்தில் குறிக்கும் போது, இவ்வாறு ஆங்கில எழுத்தினால் எழுதுவது பொருத்தமானது. அதைவிடுத்து, ஆங்கில பத வடிவத்தினையே தமிழ் எழுத்தினால் எழுதுவது பொருத்தமானதா? அவ்வாறு எழுதுவதன் மூலம் அங்குவருகின்ற மக்கள் அதனையே வாசிக்கின்றனர். இதனால் வன்பொருள் நிலையம் என்றால் எது என்று தமிழில் தெரியாத சமூகமாக தமிழ்மொழிபேசும் சமூகம் வளர்க்கப்பட்டு, ஹாட்வெயார் என்றால், இலகுவாக அடையாளம் கண்டுகொள்ளும் நபர்களை உருவாக்கியிருக்கின்றனர். இதற்கு வர்த்தகர்கள் விட்ட தவறே காரணமாகவும். தமிழ்மொழியின் அழிப்புக்கு வர்த்தகர்களும் ஒரு காரணம் என்பதே இதன்மூலம் புலப்படுகின்றது. அதேவேளை ஒருசில வர்த்தகர்கள் தமிழ்ப் பெயர்களை சூட்டியுள்ளமையும் வரவேற்கதக்க ஒன்றுதான். மட்டக்களப்பு மாவட்டம் பெரும்பான்மையாக தமிழ்பேசுபவர்களை கொண்டிருந்தாலும், கிராப்புறங்களில் இருக்கும் சிறு கடையிருந்து, நகர்புறங்களிலே உள்ள பெரிய வர்த்தக நிலையங்கள் வரைக்கும் தமிழில் பெயர்சூட்டாது, ஆங்கிலத்திலே பெயரை சூட்டியிருக்கின்றனர். இதனால் தமிழில் ஆங்கிலம் அதிகம் கலக்கப்பட்டுள்ளதுடன், தமிழ்சொற்கள் அதன் அர்த்தத்தை இழந்து மறுபுறம் அவை மறைக்கப்பட்டுவருகின்ற துர்ப்பாக்கிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு காலம் கடந்தால் குறித்த சில காலங்களிலேயே இலங்கையிலிருந்து தமிழ்மொழி அழிந்து, தமிழ்பேசுகின்றவர்கள் அனைவரும் வேற்றுமொழிகள் பலவற்றினை உள்வாங்கி வேறொரு மொழியாக பயன்படுத்தும் துர்ப்பாக்கிய நிலையேற்படும்.

தொடர்ச்சி...

## இல்மனைட் அரசியல்...

சிலரால் அழைத்து வரப்படுகின்றது. இதற்கு பல காரணங்கள் உண்டு.

உண்மையில் வாகரைப்பிரதேச சபையை ஆட்சி செய்கின்ற தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இந்த பிரச்னையை நேரடியாக அரசாங்கத்துடன் பேசுவதன் ஊடாக கையாள தவறியுள்ளனர். அதே போன்று மட்டக்களப்பில் முக்கியமான அரசியல் சக்தியான தமிழ் மக்கள் விடுதலை புலிகள் இத்தகைய பிரச்சனைகளுக்கு பெருமளவான மக்களை திரட்டி அரசுக்கு போதிய அழுத்தம் கொடுக்கும் தமது வரலாற்று கடமையினை செய்ய தவறி வருகின்றனர். ஏனெனில் மண் மீட்பு போராட்டத்தின் தொடர்ச்சியில் அரசியலுக்கு வந்தவர்கள் அவர்கள்.

கடந்த காலங்களில் வாகரை பிரதேசமென்பது ஆயுத போராட்டத்தின் முக்கிய புள்ளிகளில் ஒன்றாக இருந்தது இந்த மண்ணை காப்பதற்காகவே பல நூறு போராளிகள் தம்முயிரை இழந்துள்ளனர். புலிகள் இராணுவத்தோடு மோதும் போதும் சரி தங்களுக்கு இரண்டு பட்டு நின்று வாகரையை மீட்க இருதரப்பாக மோதிக்கொண்ட போதும் சரி எமது பிள்ளைகளின் இரத்தம் பெருமளவில் சிந்தப்பட்ட பூமி இதுவாகும். அந்த வீரர்கள் காப்பதற்காக போராடிய மண் இப்போது எங்கிருந்தோ வந்த பண முதலைகளால் அள்ளிச்செல்லப்படப் போகின்றது. இந்த இடைவெளியை பயன்படுத்திக்கொண்டே பல அரசியல் வாதிகள் இதில் மூக்கை நுழைக்க தொடங்கியுள்ளனர். அதிலும் முன்னாள் வடக்கு முதல்வர் விக்கினேஸ்வரன் இந்த பிரச்சனை குறித்து களமிறங்கியுள்ளார். அவரை பொறுத்த வரையில் 2015ஆம் ஆண்டு அவர் அதிகாரத்தில் இருந்த வேளையில் சுன்னாகம் நோர்த்தன் பவர் பிரைவேட் லிமிட்டட் என்னும் கம்பெனியின் மின்னுற்பத்தி கழிவுகள் மக்களின் குடிநீரில் நச்சு கலப்பை உருவாக்கி வருகின்றன என்கின்ற பிரச்சனை எழுந்த போது அவர் நடந்து கொண்ட விதம் அவரது மக்கள் நலனை பிரதி பலிக்கவில்லை. மாறாக அவரது தலைமையில் உருவாக்கப்பட்ட நிபுணர் குழுவானது "சுன்னாகம் நீர் குடிநீர் அசுத்தமாகவில்லை, அதில் நச்சு கலப்பு இல்லை" என்று அறிக்கை சமர்ப்பித்தது. அது மிக மோசமான அறிக்கையாகவும் குற்றமிழைத்த மின்னுற்பத்தி நிறுவனத்துக்கு ஒத்தூதும் அதிகார வர்க்க நலன் சார்ந்த அறிக்கையாகவும் இருந்தது.

இறுதியில் சுற்று சூழல் மற்றும் இயற்கை ஆய்வு நிலையத்தின் சார்பில் பேராசிரியர் ரவீந்திர காரியவசத்தினால் உயர் நீதி மன்றுக்கு இப்பிரச்சனை எடுத்து செல்லப்பட்ட போது விக்கினேஸ்வரனின் நிபுணர் குழு அறிக்கை பொய்யானது என உறுதி செய்யப்பட்டதோடு 2 கோடி ரூபாய்கள் அபராதம் அந்த நிறுவனத்துக்கு விதிக்கப்பட்டது. சுன்னாகம் மக்கள் நஞ்சுண்ட நீரை குடித்தாலும் பரவாயில்லை என்று நடந்து கொண்டவர்கள் தற்போதுவந்து வாகரை இல்மனைட் தொழிற்சாலையால் எமது மக்களுக்கு வரும் பாதகங்களை பற்றி கவலையுறுவதாக சொல்லுவது பொய் வேசமன்றி வேறென்ன? இதை நம்பி ஒரு கூட்டம் மட்டக்களப்பில் கூட்டமைப்புக்கு மாறாக விக்கினேஸ்வரனை கண்டு பிடித்து விட்டோம் என்று மகிழ்வுறுவது கேவலமானது.

மீண்டும் மீண்டும் யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் புதிய எஜமானர்களை நம்பி ஏமாறுவது எண்ணெய்க்குள் இருந்து நெருப்புக்குள் பாய்வதற்கு சமானதாகும். அதற்கு இந்த இல்மனைற் அரசியல் வாய்ப்பளிக்க கூடாது.



# தொடரும் பன்சேனை பாரி வித்தியாலயத்தின் சாதனைகள்

மட்டக்களப்பின் படுவான்கரையின் மிகவும் பிந்தங்கிய பன்சேனையில் அமைந்துள்ள பாரி வித்தியாலயத்தின் மாணவிகளின் சாதனைகள் தொடர்கின்றன.

கிழக்கு மாகாணத்தில் மகளிர் கால்பத்தில் பல காலமாக சிறந்துவிளங்கும் அந்தப் பள்ளிக்கூடத்தின் கால்பந்து அணிக்கான அனுசரணையை அரங்கம் நிறுவனம் பொறுப்பேற்றுள்ளது.

அதேவேளை, அந்தப் பள்ளிக்கூட மாணவிகள் மெய்வல்லுனர் போட்டிகளிலும் சாதனைகளைப் படைத்துள்ளனர். கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் விளையாட்டு விழாவில் மட்/மமே/பன்சேனை பாரி வித்தியாலய மாணவிகள் வரலாற்றுச் சாதனைகள்...



இ.கஜந்தி
100 M - முதலாம் இடம்
நீளம் பாய்தல் - முதலாம் இடம்
முப்பாச்சல் - இரண்டாம் இடம்

பா.வசந்தினி
400 M - முதலாம் இடம்
800 M - முதலாம் இடம்
1500 M - முதலாம் இடம்
4*400 M - முதலாம் இடம்
4*100 M - மூன்றாம் இடம்
*இரண்டு மாணவிகள்

சிறந்த வீரர்கள்
*பெண்களுக்கான அஞ்சல் போட்டிகளில் first runner up
*06தங்கம், 01,வெள்ளி
,01 வெண்கலம் என மொத்தமாக 08 பதக்கங்கள்....









# மாமாங்கப்பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம்

## நல்லையா உடையார் குடும்பத்தினரின்


## ஏழாவது திருவிழா (28 – 07 – 2019, ஞாயிற்றுக்கிழமை)

## ஐந்து தலைமுறையைத் தாண்டிய குடும்பத்தின் உபயம்


நல்லையா உடையார்


நேசரத்தினம்


முத்துக்குமாரசாமி


வேல்நாயகம்


நாகரத்தினம்


பாலசிங்கம்


தங்கையா


சொர்ணநாயகி


சௌந்தரநாயகி


நவரத்தினநாயகி


பூபாலரத்தினம்


சபாநாயகி

அடியாரகளை அன்புடன் அழைக்கிறோம்!

# இப்படியும் ஒரு காலம் நிலவியது : கதை— 7

## இராவணேசன் நாடகத்தின் மேடை நிர்வாகியும் மனேஜருமான நியாஸ் அகமட்

*(எல்லா இனத்துப் பேரப் பிள்ளைகளுக்கும் ஒரு பாட்டன் சொல்லும் பழம் கதைகள்)*



அம்ரிதா ஏயெம் என எழுத்துலகில் அறியப்பட்டவர் நியாஸ் அகமட்.

மருதமுனையைச் சேர்ந்த இவர் நம் மத்தியில் வாழும் சிறந்த சிறுகதை எழுத்தாளரும் சிந்தனையாளருமாவார். இப்போது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராயுள்ளார். அவர்துறை விலங்கியல். கிழக்குப்பல்கலைக் கழகத்தில் அவர் மாணவராக 2000 ஆம் ஆண்டுகளில் பயின்று கொண்டிருந்தார். அப்போது சிறுகதை எழுதுவதில் நாட்டமுள்ளவராக இருந்தார்.

குரங்குகளைப்பற்றி அவதானித்தார் ஆராய்ந்தார். அவர் கண்ட குரங்குலகை எமக்கு அவர் விளக்கியபோது நாம் மூக்கின் மேல் கைவைத்து வியந்து நின்றோம். அவற்றின் வாழ்வுமுறை பற்றிக் கதைகளும் எழுதினார். இயற்கையை, மனிதர்களைச்
சக உயிர்களை நேசிக்கும் அவர் பண்பு எம்மைக் கவர்ந்தது. அவர் செயற்பாடுகளால் நாம் கவரப்பட்டோம். உறவு ஏற்பட்டது. அப்போது நான் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவராயிருந்தேன், நாடகவிழாக்கள், கண்காட்சிகள், கருத்தரங்குகள் இன்னிய அணிகள் என நுண்கலைத் துறை அமர்க்களப்பட்ட காலம் அது. அடிக்கடி எனது அறைக்கு வருவார், உரையாடுவார், என் மனைவி சித்திரலேகாவுக்கும் அறிமுகமானார், குடும்ப நண்பராகவும் ஆனார். அவர் எழுத்தாற்றலும் பேச்சுக்களும் பொறுப்புணர்ச்சியும் புத்திசாலித்தனமும், கெட்டிக்காரக்களுக் கேயுரிய கிண்டல் பேச்சும் எனக்குப் பிடித்துக் கொண்டது. நான் இராவணேசன் தயாரித்த காலம் அது. அன்று உதவி விரிவுரையாளர்களா யிருந்த ஜெயசங்கர், பாலசுகுமார், சிவரத்தினம் ஆகியோருடன் மாணவர்களும் என்னிடம் கூத்துப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தார்கள். இராவணேசன் தயாரித்தபோது நியாஸை நான் முகாமையாளராக இருக்கமுடியுமா? மிகவும் பொறுப்பான வேலை என்றேன். தனக்கேயுரிய கிண்டல் சிரிப்போட இருந்துதான் பார்ப்போமே என்றார்.

என்ன என்ன செய்ய வேண்டும் என விளக்கி அவரிடம் முழுப்பொறுப்பையும் ஒப்படைத்தேன். அவருக்கு நாடகம் புதிது, அதிலும் கூத்துப் பாணியிலான நாடகம் இன்னும் புதிது. மாணவர்களும் புதிது. அனைவரும் தமிழ் மாணவர்கள் மாணவிகள் அனைத்தையும் அனைவரையும் அவர் லாவகமாகக் கையாண்டார்.

மாணவர்களும் விரிவுரையாளர்களும் அவருக்குக் கட்டுப்பட்டனர். அவர் அனைவரினதும் மதிப்பிற்குரியவரும் ஆனார்.

பார் வீதியில் இருந்த பல்கலைக்கழக விருந்தினர் விடுதியில் வாரம் தோறும் வெள்ளி, சனி, ஞாயிறு நாட்களில் தங்கி இராப்பகலாக இராவணேசன் பழகுவோம்.

காலையில் 5.00 மணிக்கு எழும்பிவிட வேண்டும் இரவு 10.00 மணிக்குத்தான் படுக்கை, ஒரு இராணுவக்கட்டுப்பாட்டுடன் பயிற்சிகள் நடைபெற்றன. எனக்கு லெப்டினண்டாக நியாஸ் மிகஅதிகாலையில் கலைஞர்களை எழுப்புதல் அவர்களுக்கான காலைத்தேநீர், காலைச்சாப்பாடு இடையில் சிற்றுண்டி மதிய உணவு பின்னேரச் சிற்றுண்டி இரவு உணவு என அனைத்தையும் ஒழுங்கு செய்தல், மேடைபொருட்களை ஒழுங்கு செய்தல் எனபன அவரது வேலைகள். நாடகத்தின் சூத்திரக் கயிறாக இயங்கினார்.

அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் என்ன உறவு என்று கேட்டவரும் உண்டு.

அந்த அப்துல் காதர் இல்லாவிட்டால் இந்த இராவணேசன் என்ற அமாவாசை அசைந்திருக்கவே முடியாது. சாப்பாட்டு விடயம் மாத்திரமல்ல பாத்திரங்களுக்கான உடைகளை ஒழுங்கு செய்தல், அவற்றை ஒழுங்காக எடுத்து வைத்தல்

பின்னர் பாத்திரங்களுக்கு அவற்றை வழங்கல் எனப் பல பாரிய பணிகளையும் செய்தார். எனக்கு மிக மிக வலக்கரமாக விளங்கினார். இதனால் எமது நெருக்கம் இன்னும் கூடியது. இலக்கிய உரையாடல்களும் அரசியல் உரையாடல்களும் அறிவியல்




உரையாடல்களும் அதிகரித்தன. குரங்குகள் பற்றிய அறிவும் எனக்கு கூடியது. 2000 ஆம் ஆண்டு கிழக்கு பல்கலைக்கழக மண்டபத்தில் இராவணேசன் முதல் மேடையேற்றம், நாடகம் முடிய கலைஞர்கள் அனைவரும் மேடையில் தோன்றி வணக்கமுரைப்பது வழமை. இறுதியாகத்தான் நான் மேடைக்கு வருவேன்

எனக்கு முன்னால் சென்று நியாஸ் வணக்கமுரைப்பார்.

இதனை அன்று கண்ட அவரது நண்பர்கள் எனக்கு முன்னால் வருவதால் அவரையே நாடகத்தின் நெறியாளர் என மயங்கினார்களாம். நேரடியாகவும் கேட்டார்களாம்.

அவர் தயாரித்த நாடகம் இராவணேசன் என்று அவரை வாழ்த்தினார்களாம்.

இதனை நியாஸ் என்னிடம் கூறிச் சிரித்தார். அதில் ஒருவித பிழையும் இல்லை.

அந்த அளவு உழைப்பை அவர் அதில் செலுத்தியிருந்தார்.

2002.2005 ஆகிய காலங்களில், எங்களுடன் இராவணேசத் தயாரிப்பில் ஈடுபட்ட இவர் பின் பங்குபெற வாய்ப்பிருக்கவில்லை. 2000 ஆண்டுக் காலகட்டத்தில் இராவணேசன் மேடையிடுவதற்கு நான் எதிர் நோக்கிய சவால்கள் பயமுறுத்தல்கள், மறைமுகத் தடைகள் அதிகம். அவை அன்று இன்னொரு வடிவத்தில் வந்தன.

அச்சவால்களை நான் எதிர் கொள்கையில் எனக்கு உறுதி தருபவராகவும், சாட்சியாகவும் உடன் நின்றார் நியாஸ் அகமட். சில விடயங்களை நாங்கள் மட்டுமே அறிவோம். 2019 2014 களில் புதியவர்களைக்கொண்டு இராவணேசன் பழக்குகையில் அவரை அழைத்துப் பழைய அனுபவங்களைப் பகிரக் கேட்பேன். சுவராஸ்யமாக தன் அனுபவங்களைக்கூறுவார். 2018 இல் பேராதனைப் பல்கலைக்கழகம் கொண்டு செல்ல மீண்டும் இராவணேசன் பழகினோம் . வந்து ஒருமுறை மாணவர்களுடன் பழைய அனுபவங்களைப் பகிரலாமே என்றேன்.

ஒரு நாள் அதிகாலைபயிற்சியின் போது வந்து விட்டார் நாடகப்பயிற்சி பார்த்தார்.

நாடகம் எவ்வாறு பல திறன்களை வளர்க்கும் என்பதை ஒரு நாடக விரிவுரையாளரைப்போல விபரித்துக் கூறினார்.

பின்னர் மாணவர்களுடன் தனது பழைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.


சுவையான அனுபவங்கள் அவை. புதிய விடயங்கள் பல கூறினார்.

இராவணேசனின் இன்றைய வெற்றிக்குப் பின்னால் நியாஸ் அகமட் போன்றவர்களின் பெரும் உழைப்பும் இருகின்றது என்பதுதான் நான் இங்கு சொல்ல வருவது.

---

தொடர்ச்சி...

## கல்முனையில் பள்ளிவாசல் வீதியாக ........



சந்திரசேகரம் ராஜன், வி.சிவலிங்கம் ஆகியோர் கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த (24) புதன்கிழமை மாலை இடம்பெற்றது.

பொலிசில் முறையிட்ட த.தே. கூட்டமைப்பின் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் இதுபற்றிக் கூறுகையில்:

'எமது நியாயமான கல்முனை வடக்கு பிரதேசசெயலக விவகாரம் உச்சக்கட்டத்திலிருக்கின்ற இக்காலகட்டத்தில் வேண்டுமென்றே ஐ.தே.கட்சி அமைப்பாளரான அரசியல்வாதி இந்த பெயர்மாற்றத்தை ஏற்படுத்த முனைந்துள்ளார்.

இவ்வீதி பெயர்மாற்றம் செய்யப்பட்டு ஐ.தே.க. அமைப்பாளரான றசாக் என்பவரின் படம்போட்ட பெயர்ப்பலகை திறக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதியின்றி நாட்டப்பட்டிருந்த அப்பெயர்ப்பலகையில் அச்சபையின் இலச்சினையும் பொறிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதிகாரசபைக்கு எதுவுமே தெரியாதாம்.

500 வருடங்களுக்கும் மேலாக இருந்துவந்த தரவைப்பிள்ளையார் ஆலய வீதியை ஒரே இரவில் கே.கே.பி வீதியென்று பெயர்மாற்ற இவருக்கு அதிகாரம் கொடுத்தது யார்? எமது மாநகரசபையில் இப்பெயர்மாற்றம் தொடர்பாக எவ்வித பிரேரணை கலந்துரையாடப்படவில்லை. தீர்மானமுமில்லை. இந்நிலையில் கேவலம் ஒரு அமைப்பாளருக்கு




பெயர்மாற்றம் செய்ய அனுமதியளித்தது யார்?

இணக்கம் நல்லிணக்கம் என்று பேசிப்பேசி இவர்கள் செய்கின்ற நரித்தனமான வேலையை உறவைவிரும்பும் மக்கள் முன்னின்று எதிர்க்கவேண்டும். இன்றைக்கு ஒருவருடத்திற்கு முன்பு கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் இப்பாதை தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்கில் இப்பாதை தரவைப்பிள்ளையார் ஆலய வீதிதான் எனத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்ததை ஞாபகப்படுத்தவிரும்புகிறேன்.

எனவே எமது வடக்குப்பிரதேச செயலகத்தின் தென் எல்லையான தரவைப்பிள்ளையார் ஆலய வீதியின் பெயரை மாற்றி வரலாற்றை மாற்ற இந்த அரசியல் சக்திகள் முனைகின்றன.

கொழும்பில் இணக்கம் பேசுகிறார்கள். இங்கு பிணக்குக்கு சதி செய்கிறார்கள். எனவே உடனடியாக குறித்த நபர் இப்பெயர்ப்பலகையை நீக்கி இன உறவுக்கான முட்டுக்கட்டையை களையுமாறு கேட்கிறேன்.'



# இமாலய சாதனை புரிந்த ''தேனகச் செம்மல்'' செ.இராஜதுரை

*அத்தியாயம்-10*

*எழுத்துத்துறையில் இராஜதுரை*

***01. லங்காமுரசு***

தன் பள்ளிப் பருவத்தின் இலட்சியமான எழுத்தாளராக வேண்டும் என்கின்ற எண்ணத்திற்கு தீனி போட கோட்டைமுனையைச் சேர்ந்த தன் நண்பர் கே.கே.ஷா (பின்நாளில் சிறுகதை எழுத்தாளர் பித்தன்) அவர்களை இணைத்துக் கொண்டு லங்காமுரசு என்கின்ற பத்திரிகை ஒன்றை தொடங்கினார் இராசதுரை. லங்காமுரசு கனதியான விசயதானங்களை கொண்ட பத்திரிகையாக எல்லோராலும் விரும்பப்பட்டது.

***02.சுதந்திரன்***

தமிழரசுக்கட்டசியின் உத்தியோகப் பத்திரிகையாக முதன்முதலில் தொடங்கப்பட்ட பத்திரிகையே சுதந்திரன் ஆகும். இப்பத்திரிகையின் ஆசிரியராக எஸ்.ரி.சிவநாயகமும் உதவி ஆசிரியராக செ.இராஜதுரையவர்களும் இப்பத்திரிகையை சிறப்பாக நடத்தி கட்சியின் கொள்கை விளக்கங்களையும் செய்திகளையும் சுவாரஸ்யமாகவும் சூடாகவும் கொடுத்து மக்களின் அபிமானத்தைப் கவர்ந்த பத்திரிகையாக தழைத்தோங்க வைத்தனர். திரு. எஸ்.ரி.சிவநாயகம் மட்டக்களப்பு தாமரைக்கேணியைச் சேர்ந்தவர். திரு.செ.இராஜதுரை மட்டக்களப்பு மோர்சாத்பிட்டியைச் சேர்ந்தவர். என்பது குறிப்பிடத்தக்கது. தமிழரசுக் கட்சியின் பாரிய வளர்ச்சிக்கு சுதந்திரன் பத்திரிகை அக்காலத்தில் மிகவும் பங்களிப்பைச் செய்திருந்ததை யாரும் மறந்துவிட முடியாது.

***03.தமிழகம்***

சுதந்திரன் பத்திரிகை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை இராஜதுரையவர்களால் தமிழகம் என்னும் ஜனரஞ்சக பத்திரிகையொன்றும் வெளியிடப்பட்டது. மேலும் 04.முழக்கம் 05.சாந்தி 06.பாடுமீன் 07.தேனாடு போன்ற பத்திரிகைகளை நடாத்தி ஆசிரியராக இருந்து தன் எழுத்துக்களால் அலங்கரித்தவர் திரு. இராஜதுரையவர்கள். இவைகளோடு மாத்திரமில்லை சிறுகதைகளையும் கட்டுரைகளையும் எழுதி வாசகர்களின் அபிமான சிறுகதையெழுத்தாளராகவும் திகழ்ந்தார். இலங்கையில் மட்டுமல்ல இந்தியத் தமிழ்நாட்டிலும் வெளிவந்த பத்திரிகைகள் சஞ்சிகைகளிலும் தன் எழுத்தோவியங்களை பதித்திருந்தார். திரு.ரா. கிருஸ்ணமூர்த்தி ஆசிரியராக இருந்தபோது கல்கியில் இவர் எழுதிய 'பழிக்குப்பழி' அக்காலத்தில் சிறந்ததொரு சிறு கதையாக பாராட்டைப்பெற்றது. அத்தோடு ஜேஜி.ஜெயசீலன் அவர்களால் 'இராஜதுரை' என்ற பெயரில் வெளியிட்ட சஞ்சிகையில் 01.05.1982ல் 'ராசாத்தி' என்ற இவரது குறுநாவல் பிரசுரமாகியிருந்தது. அத்தோடு இவரால் எழுதப்பட்ட சிறுகதைகளில் சில 'மிஸ்கனகம்' என்ற பெயரில் சிறுகதைத் தொகுப்பாக வெளிவந்தும் இருந்தது. அவ்வப்போது இவர் எழுதிய கட்டுரைகளும் பல்வேறு பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. இவைகளில் 'கோபுரம்' இதழில் இவரால் எழுதப்பட்ட 'மாநகர்மதுரை' என்ற தலைப்பிலும் 'ஞானப்பிரகாச முனிவர்' என்ற தலைப்பிலும் வெளிவந்த கட்டுரைகளைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். இவ்வேளையில் கண்ணதாசன் ஆசிரியராக இருந்து வெளிவந்த 'தென்றல்' பத்திரிகையில் இராஜதுரையவர்கள் 24.01.1956ல் பொங்கல் திருநாளுக்காக எழுதி பிரசுரமான 'கடமை புரிவோம்' என்கின்ற அன்றைய கட்டுரையை இன்றைய சந்ததி இவரின்

தொடர்ச்சி பக்கம்... 15

# ஒரு ஆளுமையின் உண்மையானதும் நேர்மையானதுமான செயற்பாடுகளை அவர் மீதான காழ்ப்புணர்வு மூடி மறைக்க முடியாது.



கடந்த 68 ஆவது அரங்கத்தில் என்னால் எழுதப்பட்ட 'உயர் கல்வி நிறுவகத்தில் வருகைதரு கலைஞர்களாக அண்ணாவிமார்: சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவக முன்னாள் பணிப்பாளரின் முக்கியமான பங்களிப்பு' எனும் தலைப்பிலான கட்டுரைக்கு எதிர்வினையாக 69 ஆவது அரங்கம் இதழில் விதுரன் என்பவரால் 'வரலாற்றை மூடி மறைத்தலும் இட்டுக்கட்டலும்' எனும் தலைப்பிடப்பட்ட கட்டுரை ஒன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. இது குறித்து எனது கருத்துக்களைக் கூற வேண்டியது அவசியம் என்பதால் இக்குறிப்புக்களை எழுதுகின்றேன்.

நான் எழுதிய விடயங்கள் அரங்க அறிவியல் செயற்பாடுகள் சார்ந்த கற்கையுடன் சம்பந்தப்பட்டவையாக இருப்பதனால் இவ்விடயங்களைப் பற்றி உரையாடும் போது வெளிப்படைத்தன்மையுடன் உரையாட வேண்டியது அவசியம் எனக் கருதுகின்றேன். அதாவது ஒரு கற்கைத்துறை சார்ந்து வாத விவாதங்களை முன்வைக்கும் போது ஒளிந்து நின்று புனை பெயரில் எழுதுவது ஆய்வறிவுத் துறையினைச் சார்ந்தவர்களுக்கு பொருத்தமற்றது என்பதை முதலில் கூற விரும்புகின்றேன்.

ஒரு அரச நிறுவகத்தின் உத்தியோகபூர்வ பதவிகள் பற்றியும் அவற்றின் நியமனங்கள் பற்றியும் விடயங்களை உரையாடும் போது, அவற்றை ஊடகங்களில் பதிவாக்கும் போது, அவை பற்றிய ஆதாரங்களை அடிப்படையாக வைத்து உரையாட வேண்டியது அவசியமாகும். வெறும் ஊகங்களையும், கற்பனைகளையும், வியாக்கியானங்களையும், வதந்திகளையும், பொய்களையும், புனைவுகளையும் ஆதாரமாகக் கொண்டு ஊடகங்களில் எழுதுவது, விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் சேர்ந்து ஆதாரமற்ற குற்றங்களை ஒருவர் மீது இட்டுக்கட்டி பொது மக்கள் அபிப்பிராயம் எனச்சொல்லி பொது மக்களை அவமதிப்பது நேர்மையான செயலாக அமைய முடியாது. இவ்வாறான வெளிப்பாடுகளின் உண்மைத்தன்மையினை ஆராய்ந்து உறுதிப்படுத்தாமல் ஊடகங்களில் வெளிப்படுத்துவது ஊடக அறமுமல்ல. விதுரன் குறிப்பிட்டுள்ள பொது மக்களின் காந்தி பூங்கா ஆர்ப்பாட்டமும் இத்தகைய முறையிலேயே நடைபெற்றிருந்தது.

எனவே! சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளரின் பணி தொடர்பாக நான் குறிப்பிட்ட விடயத்தை முன்னிறுத்தி அதற்குள் சென்று முன்னாள் பணிப்பாளர் தொடர்பாக விதுரன் வெளிப்படுத்த முனையும் 'நேர்மையற்ற நியமனம்';, 'பதிற்கடமையாற்றிய உத்தியோகத்தர் சரியான முறையில் செயற்படவில்லை' என்பவை குறித்து உரிய உத்தியோகபூர்வமான சான்றாதாரங்களுடன் வெளிப்படைத்தன்மையுடன் இந்த அரங்கத்திலேயே எழுதுவாராக இருந்தால் அதன் உண்மைத்தன்மையினை சாதாரண வாசகர்கள் அறிந்து கொள்ள முடியும்.

இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய அரங்க ஆய்வறிவு வரலாற்றில் செயலாற்றிய திருப்பு முனைகளை ஏற்படுத்திய ஆய்வறிவாளர்கள் பற்றிய ஆய்வறிவுக் கற்கையில் பேராசிரியர் சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் சு.வித்தியானந்தன், கலாநிதி சி.ஜெயசங்கர் ஆகியோர் முக்கியமானவர்களாக அடையாளங் காணப்படுகின்றனர்.

பேராசிரியர் சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை ஆகியோர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றில் அதன் ஆரம்ப காலத்தில் தமிழர்களின் பாரம்பரிய அரங்குகள் தொடர்பான அறிவியலுக்கான அடித்தளங்களை அமைத்தவர்கள். இது குறித்து நாம் ஆழமாக உரையாட வேண்டிய தேவை இன்று அவசியமாகியுள்ளது. அடுத்து பேராசிரியர் சு.வித்தியானந்தன் பாரம்பரிய அரங்க அறிவியற் தளத்தில் மிகவும் முக்கியமானவர் பாரம்பரிய ஆற்றுகைக் கலையான கூத்தை படச்சட்ட மேடைக்குள் கொண்டு சென்று நவீன மத்தியதர வர்க்கத்திற்கான அரங்காக மாற்ற முயற்சித்தவர்.

பேராசிரியர் சு.வித்தியானந்தனின் கூத்துச் செம்மையாக்கம் பற்றிய விமர்சனங்களை இக்கட்டுரையாளன் கொண்டிருக்கின்றேன். அது காலனீய சிந்தனையுடனான செயற்பாடு என்பதில் உறுதியாக இருக்கிறேன்.

ஆனாலும் வரலாற்றில் அவரின் செயற்பாட்டிற்குள்ள முக்கியத்துவத்தை வலியுறுத்த வேண்டியது அவசியமாகும். இதைக் கூறும் போது அவரை விமர்சித்து விட்டு அவர் பற்றிக் கூறுவது தத்துவார்த்த தெளிவின்மை என்று எழுதுவது சிறுபிள்ளைத் தனமாகவே தெரிகிறது.

கார்ள்மாக்ஸ் அவருடைய தோழர்களை நோக்கிக் கூறினார் 'தத்துவவாதிகள் உலகிற்கு விளக்கம் கொடுக்கிறார்கள் ஆனால் நாங்கள் உலகத்தை மாற்ற முனைகின்றோம்' என்று, இதுதான் பின்னாளில் புரட்சி என்று கூறப்பட்டது. நானும் இலங்கைத் தமிழரின் பாரம்பரிய அரங்க அறிவியல் செயற்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்திய நபர்கள் என நான் கருதும் ஆளுமைகளையே குறிப்பிட்டிருந்தேன்.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் காலனீயச் சிந்தனைகளுடன் செய்தவற்றையே மூன்று தசாப்தங்களின் பின்னர் மீண்டும் செய்து கொண்டு, பேராசிரியர் சு.வி தான் கூத்து மீளுருவாக்கத்தை தொடங்கினார் என திரிபுபடுத்தி வரலாற்றை மூடி மறைத்து இட்டுக்கட்டி பேராசிரியர் சு.விக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி வரும் நேர்மையீனச் செயல்கள் தொடர்பாகப் பல கேள்விகள் உள்ளன. இந்த மூடிமறைத்தல்களையும் இட்டுக்கட்டுகைகளையும் ஆதாரபூர்வமாக கட்டவிழ்த்துக் காட்டவும் முடியும். (இது குறித்து ஆதாரங்களுடன் பிறிதொரு கட்டுரையில் விரிவாக எழுதுகிறேன்)

**து.கௌரீஸ்வரன்**

தமிழர்களின் அரங்க ஆய்வறிவு வரலாற்றில் விளக்கங்களை முன்வைத்த ஆராய்ச்சியாளர்கள் பலர் உள்ளனர் அவர்கள் கூறும் விடயங்கள் யாவும் முடிந்த முடிவுகள் அல்ல. இயங்கியல் பொருள் முதல்வாதிகள் எவரும் விதுரன் கூறுவது போல் 'அது போன்ற நூல்களை இனிவருங் காலங்களில் எவரும் எழுதவும் முடியாது' எனக் கூறத் துணியமாட்டார்கள். இன்று பின்நவீனச் சிந்தனைகளுடனும் செயற்பாடுகளுடனும் பரீச்சயம் கொண்டுள்ள ஆய்வறிவாளர்களால் ஏற்கெனவே எழுதப்பட்டுள்ள நூல்கள், ஆய்வேடுகள் என்பன கட்டவிழ்க்கப்பட்டு மதிப்பிடப்பட்டு வருவதனைக் காண்கிறோம். கற்று வருகிறோம்.

அண்ணாவிமார்களை வருகைதரு கலைஞர் எனும் உத்தியோகபூர்வ அந்தஸ்துடன் பல்கலைக்கழகத்திற்குள் அழைத்த செயற்பாடு இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய அரங்க அறிவியல் வரலாற்றில் மிகவும் முக்கியமான செயற்பாடாக அமைந்துள்ளது. இதற்காகத் தொடர்ச்சியாகப் பலவருடங்கள் செயலாற்றிய கலாநிதி சி.ஜெயசங்கர் விசேட கவனிப்பிற்குரியவராகின்றார்.

முடிவாக, ஒரு ஆளுமையின் உண்மையானதும் நேர்மையானதுமான செயற்பாடுகளை அவர் மீதான காழ்ப்புணர்வுகள் உந்தித் தள்ளும் நபர்களாலும் அவர்தம் எழுத்துக்களாலும் ஒரு போதுமே மூடி மறைக்க முடியாது. உலகத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக செயற்பட்ட ஆளுமைகளின் வரலாறுகள் கற்றுத்தரும் பாடமாகவும் இதுவுள்ளது.

# விளையாட்டு

## கிழக்கு மாகாண கால்பந்தில் மட்டக்களப்பு இரு பிரிவுகளிலும் சம்பியன்



--- மொஹமட் அஸாருதீன் ---

கிழக்கு மாகாண மாவட்ட அணிகளுக்கு இடையில் நடந்த கால்பந்து தொடரில் ஆண்கள், பெண்கள் என இரண்டு பிரிவுகளிலும் மட்டக்களப்பு மாவட்டம் சம்பியன் பட்டம் வென்றிருக்கின்றது.

இந்த கால்பந்துத் தொடரில் பெண்களுக்கான இறுதிப் போட்டி ஞாயிற்றுக்கிழமையும் (21), ஆண்களுக்கான இறுதிப்போட்டி திங்கட்கிழமையும் (22) மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றிருந்தன.

***<u>பெண்கள் பிரிவு — மட்டக்களப்பு எதிர் திருகோணமலை:</u>***

கிழக்கு மாகாண மாவட்டங்களில் பெண்கள் பிரிவு கால்பந்து சம்பியனை தீர்மானிக்கும் இறுதி ஆட்டத்தில், மட்டக்களப்பு மாவட்ட மகளிர் கால்பந்து அணியும் திருகோணமலை மகளிர் கால்பந்து அணியும் மோதின.

போட்டியின் ஒருபாதி 30 நிமிடங்களாக அமைந்த இந்த மோதலில், மட்டக்களப்பு மாவட்ட மகளிர் கால்பந்து அணி தொடக்கம் முதலே திறமையினை வெளிப்படுத்தியது.

பின்னர் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அணிக்காக, P. வசந்தினி முதல் கோலினை 19ஆவது நிமிடத்தில் பெற்றார். அத்தோடு, மீண்டும் வசந்தினி போட்டியின் 23ஆவது நிமிடத்தில் இன்னுமொரு கோலைப் பெற்றார்.

இதனால், மட்டக்களப்பு மாவட்ட மகளிர் கால்பந்து அணி போட்டியின் முதல்பாதி நிறைவுக்கு வரும் போது 2-0 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலை பெற்றது.

தொடர்ந்து போட்டியின் இரண்டாம் பாதியிலும் மட்டக்களப்பு மாவட்ட அணியின் ஆதிக்கமே நீடித்தது. மட்டக்களப்பு மாவட்ட அணிக்காக இன்னுமொரு கோலினை வசந்தினி போட்டியின் 40ஆவது நிமிடத்தில் பெற்றார். எனினும், திருகோணமலை அணியினரால் ஒரு கோலைக் கூட போட்டியில் பெற முடியாமல் போயிருந்தது.

அதன்படி, 3-0 என்ற கோல்கள் கணக்கில் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் கால்பந்து அணி திருகோணமலை மாவட்ட மகளிர் கால்பந்து அணியை தோற்கடித்து மாகாண சம்பியனாக நாமம் சூடியது.

***<u>ஆண்கள் பிரிவு — மட்டக்களப்பு எதிர் திருகோணமலை:</u>***

கிழக்கு மாகாண ஆண்கள் பிரிவு கால்பந்து சம்பியனை தீர்மானிக்கும், போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட ஆடவர் கால்பந்து அணியும், திருகோணமலை மாவட்ட ஆடவர் கால்பந்து அணியும் மோதின.

போட்டியில் ஆரம்பம் முதலே இரு அணிகளும் சமபலத்தினை காட்டியிருந்தன. எனினும், தொடர்ந்து முன்னேறிய ஆட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட கால்பந்து அணியின் ஆதிக்கம் வெளிப்படத் தொடங்கியது.

பின்னர், போட்டியின் முதல் கோலை முதல் பாதியின் 37ஆவது நிமிடத்தில் VTM. அனஸ் பெற்று போட்டியின் கோல்கள் நுழைவாயிலை திறந்து வைத்தார்.

போட்டியின் இரண்டாம் பாதி ஆரம்பித்து சிறிது நேரத்திலேயே, மட்டக்களப்பு மாவட்ட அணிக்காக மற்றுமொரு கோல் பெறப்பட்டது. இந்த கோலினை டார்லோஸ் பர்தலோட் பெற்றார்.

இதனை அடுத்து, திருகோணமலை அணிக்காக முதல் கோலினை போட்டியின் 82ஆவது நிமிடத்தில் A. றஷான் பெற்றுக்கொடுத்தார்.

மட்டக்களப்பு ஆடவர் கால்பந்து அணி கிழக்கு மாகாண சம்பியனாக நாமம் சூடியது.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

## கிரிக்கட் விதிமுறைகளில் புதிய மாற்றம்

சர்வதேச கிரிக்கட் கவுன்சில் (ஐசிசி) கிரிக்கட் விதிமுறைகளில் புதிய மாற்றங்களை கொண்டுவந்துள்ளது. ஐசிசியின் வருடாந்த பொதுக்கூட்ட தீர்மானங்களுக்கமைவகாவே இப் புதிய விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய விதிமுறைகளக்கமைவாக போட்டி ஒன்றில் காயமடைந்து போட்டிகளில் பங்கேற்க முடியாத நிலையில் காணப்படும் வீரருக்கு பதிலாக மாற்று வீரர் ஒருவரை பந்து வீசுவதற்கும் துடுப்பபெடுத்தாடுவதற்கும் பயன்படுத்தும் சந்தர்ப்பம் வழங்கப்படவிருக்கிறது. இதற்கு முன்னரான காலப்பகுதியில் மேலதிக வீரர் ஒருவர் களத்தடுப்பில் மாத்திரமே ஈடுபடமுடியுமாகவிருந்தது. தற்போதைய புதிய விதிமுறைக்கமைவாக மாற்று வீரர் பந்து வீசுவதற்கும் துடுப்பபெடுத்தாடுவதற்குமான வாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடியும்.

குறித்த போட்டியில் பங்குபற்றிய வீரர் ஒருவர் உபாதை காரணமாக விளையாட முடியாத நிலையில் மாற்று வீரர் ஒருவரை பயன்படுத்துவதற்கு குறித்த அணியின் மருத்துவ அதிகாரி கோரிக்கை விடுத்து அதனை போட்டி மத்தியஸ்தர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையும் விடுக்கப்பட்டுள்ளது.

மற்றுமொரு விதிமுறையாக கிரிக்கட் போட்டிகளில் பந்து வீசுவதற்கு கூடுதல் நேரத்தை எடுத்துக்கொள்ளும் அணித் தலைவருக்கு வழங்கப்படும் தண்டனையானது போட்டித்தடைகளில்லாமல் இனிவருங்காலங்களில் ஏனைய வீரர்களுக்கும் அதேயளவான அபராதங்கள் விதிக்கப்படும் என்றவாறு மாற்றப்பட்டுள்ளது.

## நூறு போட்டிகளை கடந்து சாதணை படைத்த தர்ஜினி சிவலிங்கம்



சர்வதேச அளவில் புகழ் பெற்றவரான இலங்கை வலைப்பந்தாட்ட அணியின் வீராங்கனையும் உலகின் உயரமான வலைப்பந்தாட்ட வீராங்கனை என்ற பெருமைக்கு சொந்தக்காரருமான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தர்ஜினி சிவலிங்கம் அண்மையில் தனது 100ஆவது சர்வதேச போட்டியில் விளையாடி, நூறு சர்வதேச போட்டிகளில் விளையாடிய மூன்றாவது இலங்கை வீராங்கனை என்ற சாதனையை பெற்றார்.

இலங்கை வலைப்பந்தாட்ட அணியின் முன்னால் தலைவியான இவர் கடந்த வாரம் இங்கிலாந்தின் லிவர்பூல் நகரில் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ண வபைப்பந்தாட்டப் போட்டித் தொடரில பிஜி அணிக்கு எதிரான போட்டியில் விளையாடியதன் மூலமே இச் சாதணையை அவர் நிலைநாட்டினார். அத்தோடு இவ்வுலகக்கிண்ண தொடரில் மொத்தமாக 348 கோல்களை பெற்று உலகக் கிண்ணத் தொடர் ஒன்றில் அதிக கோல்களினை பெற்ற வீராங்கனை என்ற சாதணைக்கும் சொந்தக்காரரானார். கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்று முடிந்த இத் தொடரின் இறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணி சம்பியன் ஆனதுடன் இலங்கை அணி இத் தொடரில் 15ஆவது இடத்தினையும் பெற்றுக்கொண்டது.

இலங்கை தேசிய அணிக்காக 2011ம் ஆண்டு முதல் விளையாடி பிரகாசித்துவரும் தர்ஜினி சிவலிங்கம் 2015, 2016ம் ஆண்டு காலப்பகுதிகளில் அணி நிர்வாகத்தினரால் நிராகரிக்கப்பட்டு அணியில் இடம்பெற்றிருக்கவில்லை. பின்னர் 2017ம் ஆண்டு காலப்பகுதியில் அவுஸ்திரேலியாவின் சிட்டி பெல்கன்ஸ் அணிக்காக தொழில்சார் வீராங்கனையாக இணைந்து இலங்கையிலிருந்து வெளிநாட்டு கழகத்திற்கு தொழில்சார் வீராங்கனையாக இணைந்து கொண்ட முதலாவது வீராங்கனை என்ற பெருமையையும் பெற்றுக்கொண்டார்.

இலங்கை வபைபந்தாட்ட பயிற்றுவிப்பாளராக திலங்க ஜினதாச மீண்டும் பொறுப்பேற்ற பின்னர் அணிக்குள் உள்வாங்கப்பட்ட தர்ஜினி 2018ம் ஆண்டு சிங்கப்பூரில் இடம்பெற்ற ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்சிப் போட்டிகளில் தொடரின் சிறந்த வீராங்கனை விருதினை வென்று, இலங்கை அணி சம்பியன் ஆவதற்கு பெரிதும் பங்காற்றியிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

## நுவான் குலசேகரவும் ஓய்வை அறிவித்தார்.



இலங்கை அணியின் மற்றுமொரு வேகப்பந்து வீச்சாளரான நுவான் குலசேகரவும் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இவர் கடந்த காலங்களில் சர்வதேச கிரிக்கட் தரப்படுத்தலில் பந்து வீச்சாளர்கள் தர வரிசையில் முதலாவது இடத்தில் இருந்தவர் என்பதோடு இதுவரை 21 டெஸ்ட் போட்டிகளில் 48 விக்கட்டுக்களையும் 184 ஒருநாள் போட்டிகளில் 199 விக்கட்டுக்களையும் 58 இருபதுக்கு 20 போட்டிகளில் 66 விக்கட்டுக்களையும் கைப்பற்றியுள்ளார்.

இலங்கை அணி 2014ம் ஆண்டு உலகக்கிண்ண T20 தொடரில் சம்பியனாவதற்கு இவரது பங்களிப்பும் முக்கியமாக காணப்பட்டது.

பின்னர் 2107ம் ஆண்டிலிருந்து அணியில் இடம் கிடைக்காது போன நுவான் குலசேகர மீண்டும் அணியில் இடம் பெறுவதற்கு போராடியிருந்தும் நிலையான ஒரு இடத்தினை பெறமுடியவில்லை.

இவ்வாரான நிலையில் கடந்த புதன்கிழமை சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

# கற்போம்

## விஞ்ஞானம்

குணம் சவரிராஜா


துவிக்கலப்புப்பிறப்பு சோதனை இனங்கலத்தல் (Dihybrid test cross)

இரண்டு பண்புகளுக்கான ஆட்சியுடைய இயல்புகளை உடைய ஒரு தனியன் (உ.ம். RrBb), இரண்டு பண்புகளுக்கும் தூய பின்னிடைவான இயல்புகளுடைய(wwbb) ஒரு தனியனுடன் இனங்கலக்கப்படுதல் துவிக்கலப்புப்பிறப்பு சோதனை இனங்கலத்தல் என அழைக்கப்படும்.

உதாரணமாக. கறுப்பு நிற வித்துக்களையுடைய சிவப்பு நிற அல்லிகளைக் கொண்ட பூவையுடைய தாவரங்கள், கபில நிற வித்துக்களையுடைய வெள்ளை நிற அல்லிகளைக் கொண்ட பூவையுடைய தாவரங்களுடன் இனங்கலக்கப்படுவதைக் கருதுவோம்.

கறுப்புநிற வித்துகளையுடைய சிவப்பு அல்லிப்பூக்களுக்குச் சாத்தியமுள்ள பிறப்புரிமையமைப்புக்கள் RrBb/ RRBb/RrBB/RRBB ஆகும். கபில நிற வித்துக்களையுடைய வெள்ளைநிற அல்லிப்பூக்களுக்குச் சாத்தியமுள்ள பிறப்புரிமையமைப்பு wwbb ஆகும்.


அறியப்படாத தோற்றவமைப்பு RrBb ஆக இருப்பின்,




உரு 6.5. ஒரு இரட்டைச் சோதனைக் கலப்பின் சாத்தியமான பெறுபேறுகள்

இந்த உதாரணத்தில் மேலுள்ள நான்கு தோற்றவமைப்புக்கள் 1:1:1:1 என்ற விகிதத்தில் சாத்தியமானவை.

அறியப்படாத தோற்றவமைப்பு, RrBb பிறப்புரிமையமைப்பைக் கொண்டிருப்பின் துவிக்கலப்புப்பிறப்பு இனங்கலத்தல் பின்வரும் தோற்றவமைப்புக்களைக் கொடுக்கும்.




உரு. 6.5. ஒரு துவிக்கலப்புப்பிறப்பு சோதனை இனங்கலத்தலின் சாத்தியமான பெறுபேறுகள்

மனிதரில் காணப்படும் மென்டலின் தலைமுறையுரிமையடையும் கோலங்கள்.

பொதுவான மென்டலின் இயல்புகள்

மனிதனில் காணப்படும் பல இயல்புகள் மென்டலின் தலைமுறையுரிமையடையும் கோலங்களைப் பின்பற்றுகின்றன. சில உதாரணங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

இணைந்த அல்லது பிரிந்த காதுச்சோணை:

தலையுடன் எந்த அளவுக்கு காதுச்சோணையானது இணைந்துள்ளது என்பது மென்டலின் கோலத்தில் தலைமுறையுரிமை அடைகின்றது. இணைந்த காதுச்சோணை ஒரு பின்னிடைவான இயல்பாகும். காதுச்சோணை இணைதலுக்கான பின்னிடைவான எதிருருக்களின் இரண்டு பிரதிகளும் காணப்படுதல் இணைந்த காதுச்சோணையை தோற்றுவிக்கும். (சமநுகத்துக்குரிய பின்னிடைவான நிலைமை)

நெற்றிப்பகுதியில் “ஏ” வடிவில் (widow’s peak) மயிர் காணப்படல் / காணப்படாமை நெற்றிப்பகுதியில் மயிரின் எல்லைக்கோடு ஓர் கூரிய வடிவில் காணப்படுதல் விதவையின் சிகரம் (widow’s peak) என அழைக்கப்படும் அது W என்னும் ஆட்சியுடைய எதிருருவால் தோன்றுகிறது. எனவே ஓர் widow’s peak ஐக் கொண்டு காணப்படாதவர்கள் சமநுகத்துக்குரிய பின்னிடைவான நிலைமையை (ww) க் கொண்டிருக்க வேண்டும்.

தொடர்ச்சி... (பக்கம் -14)

## கணிதம்

திரு.எஸ்.சிவரூபன், ஆசிரியர், மட் / மமே/வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயம்.

ஒருங்கமை சமன்பாடுகளைத் தீர்த்தல்

•இரண்டு தெரியாக் கணியங்களைக் கொண்ட இரு சமன்பாடுகள், ஒருங்கமை சமன்பாடுகள் எனப்படும்.

**1.** $x + y = 12 \longrightarrow (1)$

$2x - y = 18 \longrightarrow (2)$

இங்கு $x$ இன் குணகங்கள் +1 , +2உம் $y$ இன் குணகங்கள் +1 , -1உம் ஆகும். $y$ இன் குணகங்கள் எண் ரீதியிலான பெறுமானங்கள் சமமானவை. அதாவது குறிகளைக் கருதாது. எனவே, $y$ ஐ நீக்குவதற்கு இரு சமன்பாடுகளையும் கூட்ட வேண்டும்.

$x + y = 12 \longrightarrow (1)$

$2x - y = 18 \longrightarrow (2)$

(1) + (2) $(x + y) + (2x - y) = 12 + 18$ (சமமான கணியங்களுடன் சமமான கணியங்களைக் கூட்டுவதால் பெறப்படும் கணியங்களும் சமனாகும்.) அதே நேரம் $+y$ உம் $-y$ உம் கூட்டப்படும் போது $y$ பூச்சியமாகும்.

$3x = 30$ $(+y - y = 0)$

$\frac{3x}{3} = \frac{30}{3}$ (இருபக்கங்களையும் 3ஆல் வகுக்குக)

$x = 10$

**$x = 10$ஐ சமன்பாடு (1)இல் பிரதியிடுக.**

$x + y = 12$

$10 + y = 12$

$10 - 10 + y = 12 - 10$ (இரு பக்கங்களிலும் 10ஐக் கழிக்க.)

$y = 2$

**2.** $3a - b = 11 \longrightarrow (1)$

$3a + 4b = 1 \longrightarrow (2)$

இங்கு $a$ இன் குணகங்கள் +3 , +3உம் $b$ இன் குணகங்கள் -1 , +4உம் ஆகும். $a$ இன் குணகங்கள் எண் ரீதியிலான பெறுமானங்கள் சமமானவை. அதாவது குறிகளைக் கருதாது. எனவே, $a$ ஐ நீக்குவதற்கு 1ஆம் சமன்பாட்டிலிருந்து 2ஆம் சமன்பாட்டைக் கழிக்க வேண்டும்.

$3a - b = 11 \longrightarrow (1)$

$3a + 4b = 1 \longrightarrow (2)$

(1) - (2) $(3a - b) - (3a + 4b) = 11 - 1$

$3a - b - 3a - 4b = 10$

$-5b = 10$

$\frac{-5b}{-5} = \frac{10}{-5}$ (இருபக்கங்களையும் -5ஆல் வகுக்குக)

$b = -2$

**$b = -2$ஐ சமன்பாடு (1)இல் பிரதியிடுக.**

$3a - b = 11$

$3a - (-2) = 11$

$3a + 2 = 11$

$3a + 2 - 2 = 11 - 2$ (இரு பக்கங்களிலும் 2ஐக் கழிக்க.)

$\frac{3a}{3} = \frac{9}{3}$ (இருபக்கங்களையும் 3ஆல் வகுக்குக)

$a = 3$

பக்க அனுசரணை

மட்டக்களப்பு,
மெதடிஸ்த மத்திய கல்லூரி
பழைய மாணவர்கள் சங்கம்
பிரித்தானியா.

# கற்போம்

## அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 44

### க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

1.எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 வினைச்சொல்லுடன் தொடர்பற்றது.
(1)வினைச்சொல் வேற்றுமைகளை ஏற்று வராது.
(2)வினைச்சொல் வினை விகுதிகளைப் பெற்றுவரும்.
(3)வினைச்சொல் வினையடைகளை ஏற்கும் (4)வினைச்சொல் ஏவற் பொருளில் வராது.
(5)வினைச்சொல் எச்சமாக வரும். (…….)

1.2 பின்வருவனவற்றுள் பெயரும் வினையும் சேர்ந்து உருவான கூட்டுப்பகுதி
(1)உத்தரவிடு (2) சீரமை (3) காத்திரு (4) பின்பற்று (5) சரிபார் (…….)

1.3 'ஓடாத' என்னும் எதிர்மறைப் பெயரெச்சத்தின் இடைநிலை
(1)ஆத் (2) ஆ (3) த (4) ஓடா (5) த் (…….)

1.4 'ஓடின' என்னும் வினைமுற்றில் வந்துள்ள காலம்காட்டும் இடைநிலை
(1)ஓடு (2) ஓடி (3) ன் (4) அன (5) இன் (…….)

1.5 பின்வருவனவற்றுள் எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்று
(1)போனாரே (2) சொல்லாதே (3) போகாதீர்கள் (4) வரவில்லை (5) போய்வா (…….)

1.6 பின்வருவனவற்றுள் வியங்கோள் வினைமுற்று
(1) படிக்க (2) மகனே (3) பெருக (4) ஓங்குக (5) வாழ் (…….)

1.7 பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றியவினை வாக்கியம்
(1) நான் மழையைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.
(2) அம்மா காலையில் எனக்கு ஊட்டிவிட்டாள்.
(3) காலைக் கூட்டத்தில் அதிபர் பெறுபேற்றை அறிவித்தார்.
(4) அம்மா என்மீது பாசம் காட்டுகிறாள்.
(5) நான் கொழும்பிலிருந்து நேற்றுத்தான் வந்தேன். (…….)

1.8 'கொள்' என்பது முதல்வினையாக வந்த வாக்கியம்
(1) தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டான்.
(2) அவர் என்மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளார்.
(3) கட்டுரையை எழுதிக்கொள். (4) நோயாளியைக் கவனமாகப் பார்த்துக்கொண்டான்.
(5) நீங்கள் பேசிக்கொண்ட விடயம் யாது? (…….)

1.9பின்வருவனவற்றுள் பெயரடை கொண்ட தொடர்
(1) இரண்டு பூ (2) அந்தப் பூ (3) சிறந்த பூ (4) மணந்த பூ (5) பெரிதாய் (…….)

1.10 பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயரடை கொண்ட தொடர்
(1)பெருமையுள்ள மனிதன் (2) பெரிய மனிதன் (3) சிறு காய்
(4) சொன்ன கதை (5) களிப்பாக இருந்தது (…….)

1.11 அவன் அண்ணனும் இல்லை தம்பியும் இல்லை. இதில் 'உம்' இடைச்சொல் உணர்த்தும் பொருள்
(1)முற்று (2) தெரிநிலை (3) எச்சம் (4) ஐயம் (5) வெறுப்பு (…….)

1.12 யாரோ ஒருவன் நேசிக்கிறான். இங்கு 'ஓ' இடைச்சொல் உணர்த்தும் பொருள்
(1)வினா (2) திடக்குறிப்பின்மை (3) பிரிநிலை (4) ஐயம் (5) அன்பு (…….)

1.13 எவராவது பேசலாம். இதில் 'ஆவது' இடைச்சொல் உணர்த்தும் பொருள்
(1)கட்டளை (2) குறைந்தபட்சம்(3) திடக்குறிப்பின்மை (4) ஐயம் (5) வேண்டுகோள் (…….)

1.14 'கூட' என்னும் இடைச்சொல் முற்றுப் பொருள் உணர்த்தும் வாக்கியம்
(1) நான்கூட யோசித்துக்கொண்டிருந்தேன். (2) ஐந்து ரூபாய்கூட என்னிடமில்லை.
(3) உனக்கு நன்றி சொல்லக்கூடத் தெரியாதா?
(4) இனி, ஒருவன்கூடச் சத்தம் போடமாட்டான்.
(5) என்னுடன் நாய் கூட வருவதால் பயமில்லை. (…….)

1.15பின்வருவனவற்றுள் தனி வாக்கியம்
(1)கணிதமும் தமிழும் எனக்குப் பிடிக்கும். (2) ஈர்க்கு இல்லாவிட்டால் ஊசி தாருங்கள்.
(3) கொழும்புக்குப் போய் அவரைச் சந்திப்பேன்.
(4) மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினோம்.
(5) நானும் அவனும் நெருக்கமான நண்பர்கள். (…….)

1.16 குறித்த நேரத்துக்குள் பேசுவது என்பது இலகுவான காரியமல்ல. இங்கு எழுவாய்
(1) பேசுவது (2) பேசுவது என்பது (3) குறித்த நேரத்துக்குள் பேசுவது என்பது
(4) குறித்த நேரத்துக்குள் பேசுவது (5) காரியம் (…….)

1.17 அகராதி ஒழுங்கில் அமையாத சொற்றொகுதி
(1)முற்று, மேகம், மௌவல் (2) தெரிநிலை, வனம், யானை (3) எச்சம், ஐந்து, ஒடு
(4) கௌரி, தமிழ், நன்மை (5) வேடர், வேந்தன், வேல் (…….)

1.18 பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற இணைப்பு
(1) கூட்டம் முடிந்தது ஆதலால் வெளியே வந்தோம்.
(2) கூட்டம் முடிந்தது ஆகவே வெளியே வந்தோம்.
(3) கூட்டம் முடிந்தது எனவே வெளியே வந்தோம்.
(4) கூட்டம் முடிந்தது எனினும் வெளியே வந்தோம்.
(5) கூட்டம் முடிந்தது ஆனால் வெளியே வரவில்லை. (…….)

1.19 அவன் பரீட்சை எழுதியிருந்தால் சித்தியடைந்திருப்பான். இது அமைப்பு அடிப்படையில்
(1)கூட்டு வாக்கியம் (2) கலப்பு வாக்கியம் 3) செப்பு வாக்கியம்
(4) மெய்ப்பாட்டு வாக்கியம் (5) தனி வாக்கியம் (…….)

1.20 பின்வருவனவற்றுள் இலக்கண வழுவற்ற வாக்கியம்
(1) நாயும் அவனும் வந்தன. (2) கணிதமும் தமிழும் எனது விருப்புக்குரிய பாடம் ஆகும்.
(3) பேச்சுவார்த்தையின் போது உண்மைகளையே பேசப்பட வேண்டும்.
(4) புத்தகத்திலுள்ள ஒவ்வொரு கவிதையும் மனத்துக்கு இதமாக இருந்தது.
(5) நீ மற்றவர்களின் வெறுப்புக்களைச் சம்பாதித்துக் கொள்ளாதீர்கள். (…….)

## விஞ்ஞானம்


தொடர்ச்சி...

கன்னத்தில் குழிகள் (Dimples on cheek)
கன்னக்குழிகள் கன்னத்தின் தசையில் காணப்படும் பிறப்புரிமை ரீதியாகக் கடத்தப்படும் ஓர் இயல்பாகும். நபர் ஒருவர் சிரிக்கும்பொழுது, தசையின் மேலுள்ள குறுகிய தசை முகத்தின் தோலை மேல்நோக்கி இழுக்கின்றது. இது தோலில் கன்னக்குழி என்னும் சிறிய பள்ளத்தைத் தோற்றுவிக்கிறது. கன்னக்குழிகள் பொதுவாக இரு கன்னங்களிலும் தோன்றுகின்றன. ஒரு கன்னத்தில் மாத்திரம் ஒரு தனித்த குழி தோன்றுதல் அபூர்வமானதொரு தோற்றப்பாடாகும். கன்னத்தில் குழிவிழுதல் மெண்டலின் பாணியில் தலைமுறையுரிமையடையும் ஓர் ஆட்சியான இயல்பாகும்.

நேரிய மற்றும் வளைந்த பெருவிரல் (Hitchhiker's thumb)
விரற்றுண்டங்களுக்கிடையான மூட்டுகளின் அதிபரநீட்சி காரணமாக விரிக்கும்பொழுது பெருவிரல் பிற்புறம் நோக்கி வளையும் நிலையே Hitchhiker's வாரஅடி (வளையும் பெருவிரல்) ஆகும். ஆட்சியான "S" எதிருரு நிமிர்ந்த பெருவிரல் தோற்றவமைப்பை உருவாக்கும். ஆட்சியான எதிருருக்கள் காணப்படாமை பெருவிரலை மடக்குவதற்கு அனுமதிக்கும்.

நாக்குச் சுருட்டல் அல்லது சுருட்டாமை (Rolling or non- roling tongue)
ஒரு குழாயாக நாக்கின் பக்கத்துக்குரிய விளிம்புகளைச் சுருட்டும் ஆற்றல் நாக்குச்சுருட்டல் என அழைக்கப்படும். நாக்கின் உள்ளார்ந்த தசைகள் சில தனித்துவமான வடிவங்களைத் தோற்றுவிக்க சில மனிதர்களை அனுமதிக்கின்றன. ஓர் குழாய் வடிவில் நாக்கைச் சுருட்டல் மெண்டலின் எளிய தலைமுறையுரிமையடைதலைக் காண்பிக்கும் ஓர் ஆட்சியான இயல்பாகும்.


மனிதவம்சாவளிப் பகுப்பாய்வு (Pedigree analysis)
தரப்பட்ட ஒரு குடும்ப விருட்சத்தின் உள்ளே ஒரு குறிப்பிட்ட இயல்பு தலைமுறையுரிமையடைதலைக் காண்பிக்கும் வரைபடம் மூலமான ஒரு பிரதிநிதித்துவமே ஒரு வம்சாவளிப்படம் (Pedigree Chart) என அழைக்கப்படுகின்றது. தலைமுறையுரிமையடைதலின் கோலமானது விளங்கப்படக்கூடியவாறு ஒரு குடும்பத்தின் உள்ளே பல சந்ததிகளாகச் சேகரிக்கப்பட்ட தரவுகளைச் சேகரிப்பதன் மூலம் அது உருவாக்கப்படுகின்றது.




உரு. 6.6. நியம வம்சாவளிக் குறியீடுகள்

வம்சாவளிப்படங்களின் உதவியுடன் மனிதனில் காணப்படும் மெண்டலின் இயல்புகள் பகுப்பாய்வு செய்யப்படல்

விதவையின் சிகரம் (widow's peak):
கீழே தரப்பட்டுள்ள வம்சாவளிப்படத்தில் ஒரு குடும்பத்தில் மூன்று சந்ததிகளாக widow's peak இயல்பின் தலைமுறையுரிமை பிரதிநிதித்துவப்பட்டுள்ளது. உரு 6.7 இல் காண்பிக்கப்பட்டுள்ளவாறு இரண்டு சோடிகளும் ஒரு பாட்டனார் widow's peak ஐக் கொண்டிருந்தார். Widow's peak ஒரு ஆட்சியுடைய இயல்பாக உள்ளதால் widow's peak அற்ற பாட்டனார்கள் (grand parents) அந்த இயல்புக்கு சமநுகத்துக்குரிய பின்னிடைவானதாக (ww) இருக்கவேண்டும். அடுத்த சந்ததியில் சில நபர்கள் widow's peak கைக் காண்பித்தனர். சிலர் அதைக் காண்பிக்கவில்லை. Widow's peak ஐ காண்பிக்கும் இரண்டு பாட்டனார்களும் அந்நிலைமைக்கு இதரநுகமுள்ளவர்களாக (Ww) இருக்கவேண்டும். அதுபோன்றே மூன்றாவது சந்ததியில் widow's peak கை காண்பிக்கும் இரண்டு பெற்றோர்களும் அதற்கு இதரநுகமுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஏனெனில் அவர்களின் இருபெற்றோர்களில் ஒருவர் (முதலாவது சந்ததி) சமநுகத்துக்குரிய பின்னிடைவாக (ww) உள்ளார். Widow's peak கை கொண்ட மூன்றாவது சந்ததி ஒன்றில் WW ஐ அல்லது றற பிறப்புரிமையமைப்பைக் காவலாம். ஏனெனில் இரு பெற்றோர்களுமே அவ்வியல்பைக் கொண்டுள்ளனர்.



உரு. 6.7 Widow's peak இன் தலைமுறையுரிமை

பக்க அனுசரணை
NCL NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH LONDON METROPOLITAN UNIVERSITY

தொடர்ச்சி...

## சொல்லத் துணிந்தேன்!

வெவ்வேறு தனித்தனிக்கிராமங்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. கல்முனைக்குடி 1ஆம் குறிச்சி, கல்முனைக்குடி 2ஆம் குறிச்சி, கல்முனைக்குடி 3ஆம் குறிச்சி, கல்முனைக்குடி 4ஆம் குறிச்சி, கல்முனைக்குடி 5ஆம் குறிச்சி என்றே இருந்தது.

உண்மைகள் இப்படியிருக்கும்போது முஸ்லீம் தரப்பினர் கல்முனைக்குடியைக் கல்முனையுடன் பிணைத்துத் தெற்கே கல்முனை ஸாகிராக்கல்லூரியிலிருந்து வடக்கே தாளவெட்டுவான் வரையிலுள்ள பிரதேசத்தைக் கல்முனை எனச் சித்தரித்துக் காட்டுவது கல்முனைத் தமிழர்கள் மீதான ஆக்கிரமிப்பும் எதிர்காலத்தில் கல்முனைத் தமிழர்களின் இருப்பைக் கேள்விக்குட்படுத்தலுமாகும் என்பதைத் தமிழர் தரப்பினரும் விடயத்திற்கான அமைச்சரும் அமைச்சின் உயர் அதிகாரிகளும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரும் புரிந்துகொள்ள வேண்டும்.

1897இல் நிறுவப்பட்ட கல்முனைச் 'Sanitary Board ' இனதும் 1947இல் உருவாக்கப்பெற்ற கல்முனைப் பட்டினசபையினதும் வடக்கு எல்லையான தாளவெட்டுவான் வீதியைக் கல்முனைக்குடியின் வடக்கு எல்லையாகச் சித்தரிப்பது திட்டமிட்ட 'சதி' ஆகும். கல்முனைக்குடியின் வடக்கு எல்லை உண்மையில் கல்முனைத்தரவைப்பிள்ளையார் கோயில் வீதியே ஆகும்.

கல்முனை 'Sanitary Board ' மற்றும் கல்முனைப் பட்டினசபை என்கின்ற சொற்பதங்களால் சுட்டப்படும் நிலப்பரப்பும் கல்முனை என்ற சொற்பதத்தால் சுட்டப்படும் கல்முனைக் கிராமத்தின் நிலப்பரப்பும் ஒன்றல்ல. கல்முனைக் கிராமம் என்பது கல்முனை 'Sanitary Board' மற்றும் கல்முனைப் பட்டினசபையிலிருந்து கல்முனைக்குடிக் கிராமம் நீங்கிய நிலப்பரப்பாகும். எனவே கல்முனை என்பது தரவைப்பிள்ளையார் கோயில் வீதிக்கும் தாளவெட்டுவான் வீதிக்கும் இடைப்பட்ட பிரதேசமே என்பது வெள்ளிடைமலை.

எனவே கல்முனை உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தும் விவகாரத்திற்கான தீர்வு என்று வரும்போது கல்முனை தெற்குப் பிரதேச செயலகப் பிரிவுடன் மருதமுனை மற்றும் நற்பிட்டிமுனை முஸ்லீம்பிரிவு ஆகியவற்றை நிலத்தொடர்பற்ற வகையில் இணைத்துக் கொள்ளும் விடயத்திலும் அல்லது தற்போதுள்ள பெரியநீலாவணை முஸ்லீம் பிரிவுகளையும் மருதமுனைக்கிராமத்தையும் இணைத்து மருதமுனைக்கென தனியானதொரு பிரதேச செயலகப்பிரிவை ஏற்படுத்தும் விடயத்திலும் மட்டுமே தமிழர் தரப்பு நெகிழ்வுத்தன்மையுடன் சமரசத்திற்குச் செல்லலாமேதவிர 1989ம் ஆண்டு கல்முனை வடக்கு உபபிரதேச செயலகத்தின் ஆளுகையின் கீழ் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட கல்முனை 01, கல்முனை 02, கல்முனை 03, பாண்டிருப்பு 01, பாண்டிருப்பு 02, பெரியநீலாவணை 01, பெரியநீலாவணை 02, நற்பிட்டிமுனை 01, நற்பிட்டிமுனை 02, சேனைக்குடியிருப்பு ஆகிய அப்போதைய பத்துக் கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேசத்தையே தரமுயர்த்த வேண்டுமென்ற விடயத்தில் தமிழ்த்தரப்பிடம் எந்த நெகிழ்விற்கும் சமரசத்திற்கும், கிஞ்சித்தும் இடமில்லை, இடமிருக்கக் கூடாது.

தமிழர்தரப்பைப் பொறுத்தவரையில் கல்முனையையும் கல்முனைக்குடியையும் பிரிக்கும் பூர்வீக எல்லையாக விளங்கிய கல்முனைத்தரவைப் பிள்ளையார் கோயில் வீதிக்கு இப்பால் அதாவது வடக்கே ஒரு அங்குலமாவது விட்டுக் கொடுப்பது தற்கொலைக்குச் சமமாகும். அதாவது கல்முனைத்தரவைப் பிள்ளையார் கோயில் வீதிக்கும் வடக்கே உள்ள தாளவெட்டுவான் வீதிக்கும் இடையிலே அமைந்தும் கல்முனையின் 1ஆம், 2ஆம், 3ஆம் குறிச்சிகளில் அடங்கியுமிருந்த பிரதேசத்தின் ஒரு சிறு துண்டினையாவது விட்டுக்கொடுக்கத் தமிழ்த் தரப்பினர் இடமளிக்கக் கூடாது.

## மீண்டும் கடந்துபோன ......

தொடர்ச்சி...

ஒரு மக்கள் படுகொலையாக கூற, கண்டிக்க நேர்ந்ததால் அதன் பிறகு அந்த அளவுக்கு பெரிதாக எதுவும் நடக்கவில்லை. ஆகவே, சர்வதேச அபிப்பிராயம் இங்கு வன்முறைகளை தடுத்திருக்கிறதே ஒழிய பெரும்பான்மை மக்களின் மனதில் எந்த மாற்றமும் ஏற்பட்டதாக் கூறமுடியாது.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால், 83 கலவரம் நடந்து 40 வருடங்கள் ஓடிவிட்டாலும், ஒரு போர் நடந்து முடிந்துவிட்டாலும் பெரும் மக்கள் மற்றும் உடைமை அழிவு ஏற்பட்டுவிட்டாலும், இலங்கையின் பொருளாதாரம் பெரும் இறக்கத்தை சந்தித்திருந்தாலும் இவை எல்லாவற்றுக்கும் அடிப்படைக் காரணமான தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினைக்கு இதுவரை எந்த விதமான தீர்வும் இல்லை. அதனை நியாயமான வழியில் தீர்த்து வைக்கும் நோக்கமும் பெரும்பான்மையிடம் கிடையாது. காலத்தை கடத்தும் போக்கே காணப்படுகின்றது.

அதேபோல மலையக மக்களுக்கு நல்ல ஊதியமும், மரியாதையுடனான வேலை நிலைமையும் இன்றுவரை கிடையாது. அவர்களுக்கு குடியிருக்க காணி வழங்கும் சிந்தனையும் பெரும்பான்மையின மூத்த அரசியல்வாதிகளாக கூறப்படுபவர்களிடம் கிடையாது. அவர்கள் இந்த விடயங்களில் இன்னமும் இனவாதிகளாகவே செயற்படுகின்றனர். மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே மலையக மக்களை நடத்துகிறார்கள்.

இப்படியானவர்களின் தலைமையில் இலங்கையின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது என்பது இன்று ஒரு பெரும் கேள்வியாகவே இருக்கின்றது.

அழுத்தங்களால், கண்டிப்புகளால் மாத்திரம் மாற்றங்கள் வந்துவிடாது. மக்களின், அரசியல்வாதிகளின் மனதில் ஏற்படும் மாற்றங்களாலேயே உண்மையான சாதக மாற்றங்களை இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் கொண்டுவரமுடியும்.

தொடர்ச்சி...

## இமாலய சாதனை புரிந்த ''தேனகச் செம்மல்'

எழுத்துத் திறமையை அறிந்து கொள்ள கட்டுரையை அப்படியே முழுமையாகத் தருகின்றேன்.

__கடமை புரிவோம்!__

புதுமையைப் படைப்பதில் ஆர்வமும் பழமையைப் புதைப்பதில் ஆர்வமும் கொண்டவர்கள் பண்டைத் தமிழ் மக்கள். அர்த்தமற்ற குருட்டுக் கொள்கைகளையும் வரட்டுத் தத்துவங்களையும் விரட்டியடித்து அறவாழ்வு வாழ்ந்தவர்கள் அவர்கள். அந்நியருடைய ஆண்டவன்களும் வழிபாடுகளும் தமிழகத்தில் இறக்குமதி செய்யப்படு முன்பே அறிவைப் போற்றி, பெற்ற தாயையும் வளர்த்துப் பெரியவனாக்கிய தந்தையையும் வழிபட்டு வந்த அறிவியக்கவாதிகள் அவர்கள். அறிவுக்கு புறம்பான எந்த கொள்கைகளையும் கண்ணை மூடிக் கொண்டு கட்டியழும் சுபாவம் அவர்களிடம் இருந்ததே இல்லை. காடுகளிலும் மலைக்குகைகளிலும் மிருகத்தோடு மிருகமாக உண்டு உறங்கிக்கிடந்த மனிதன் இன்று வானுயர்கூட கோபுரங்களையும் வாய்க்கு உருசியான உணவுகளையும் கண்ணைக்கவரும் ஆடைகளையும் கண்டு பிடித்திருக்கிறான். இன்று அவனுக்கும் மிருகத்துக்கும் இடையிலே ஆயிரக்கணக்கான வேற்றுமைகள் நிலவுவதை நாம் காண்கிறோம். தோன்றிய காலந்தொட்டு விலங்கினங்கள் எதைப் புசித்தனவோ எதை நினைத்தனவோ எதைச் செய்தனவோ அவற்றையே தான் இன்னும் இந்த நாகரிகம் முதிர்ந்த இருபதாம் நூற்றாண்டிலும் செய்து வருகின்றன. மேலும் எண்ணற்ற ஊழியக்காலத்தின் பின்னும் அவை நினைத்தும் செய்தும் புசித்தும் உயிர் வாழப் போகின்றன. ஆனால் மனிதனோ இதற்கு முற்றிலும் மாறானவன். சிந்தனையில் புதுமை, செயலில் புதுமை, பழக்க வழக்கங்களில் புதுமை, சகலவற்றிலும் ஒரு புதுமையைக் காண வேண்டுமென்று துடிக்கும் ஒருஜீவன் அவன். இந்த ஆர்வ உணர்ச்சிதான் அறிவுத் தாகந்தான் மனிதனை விலங்குகளினைத்திலிருந்தும் விலங்கையொத்த அறிவுபடைத்த பழமை விரும்பிகளிடத் திலிருந்தும் வித்தியாசப்படுத்துகிறது.

பட்சியினம் தோன்றிய காலத்தில் தோன்றிய தூக்கணாங் குருவி பட்சியைவிட வேகமாக மனிதன் பறக்கப் பழகிக் கொண்ட இந்தக்காலத்திலும் கூட அன்று அமைத்தது போலவே இன்றும் தன் கூட்டை அமைத்து வருகிறது. ஆனால் மனிதனோ குகை வாசத்தில் ஆரம்பித்து குச்சுக்குடில்கள் அமைத்து, கூடாரங்களும் வீடுகளும் கட்டி, மாட மாளிகைகளும் மதிதவமும் நிலா முற்றங்களும் கட்டி வாழ்ந்து வருகிறான். இந்த வளர்ச்சிக்கு காரணம் எது? புதுமையைக் கண்டு பிடிப்பதில் அவனுக்கு இயல்பாகவேயுள்ள ஆவலும் ஆசையும்தான் அதற்குக் காரணம் ஆகும்.

முதன் முதலாக உலகில் தோன்றிய கொடும்புலி தன் பசியைப் போக்கிக் கொள்ள புள்ளிமானின் செங்குருதி கொட்டும் மாமிசத்தை எப்படி கிழித்து புசித்ததோ அப்படியேதான் இன்றும் அது புசித்து வருகிறது. ஆனால் மனிதனோ காட்டுக்கிழங்குகளையும் கந்தமூலகங்களையும் திரும்பத் திரும்பத் தின்றுகொண்டிராமல் தானியங்களையும் விதைத்து அறுவடை செய்யவும் இதமான உணவை நெருப்பின் உபயோகத்தினால் பாகம் செய்யவும் பயின்று கொண்டிருக்கிறானே இதற்கும் புதுமையின் மீதுள்ள மோகமே காரணமாகும்.மண்ணில் தோன்றிய மக்கள் குலத்தில் புதுமை பிறந்தது தமிழனிடத்தில் என்று தமிழகத்தில் நில-மொழி இன ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஆங்காங்கு ஆராய்ச்சிகளின் போது அகப்படும் பண்டைக் காலப் பொருட்கள் சிற்பங்கள் நாணயங்கள் கல்வெட்டுக்கல் தமிழ் மக்கள் பூர்வீக வரலாற்றையும் அவர்கள் வாழ்ந்த சீரையும் சிறப்பையும் தெரியப் படுத்திக்கொண்டு வருகின்றன.

தமிழ் மக்களின் இரத்தத்தில் இயற்கையாகவே செறிந்து கிடந்த இந்தப் புதுமையான புதுமைதான் அவர்களை 'பொங்கல் விழா' கொண்டாடச் செய்தது. பழமையைக் களைய வேண்டும் புதுமையைப் போற்ற வேண்டுமென்ற தமிழனின் அரிய பண்பிலிருந்து பூத்த புதுமைத் திருநாள்தான் பொங்கல் புதுநாள். மகேஸ்வரன் மங்கையை மணம் புரிந்தநாளோ மால்மருகன் தினைப்புனத்து வள்ளியை திருடிச் சென்ற திவ்விய திருநாளோ அல்ல. ஏரைத்தாங்கி பாரைக் காக்கும் மன்னர்களான உழவர்கள் வருடம் முன்னூற்று அறுபத்தைந்து தினங்கள் பட்ட கஷ்டத்தை மறக்கும் மதுரநாளாக மலர்ந்தது அது. காடு வெட்டி கடிய நிலம் திருத்தி உழுது பயிர் நாட்டி வேலி கட்டி நீர்ப்பாச்சி களைபிடுங்கி புது விளைவு காண்கிறான் உழவன்.

அவன் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது. உடல் இன்பத்தால் பூரிக்கிறது. முதன் முதல் வயலில் கொய்யும் கதிர்களை புதிர் எடுத்தல் என்றும் அவர்கள் ஆக்கி உண்டு மகிழ்வதை புதிருண்ணல் என்றும் கொண்டாடினான். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து வாழ்த்தும் மனோபாவத்திற்கு பொங்கல்விழா ஓர் எடுத்துக் காட்டாகும்.

தமிழன் உடலோடு உணர்வோடு ஒட்டிக் கொண்டிருந்த இப் புதுமை மோகம் இடைக்காலத்தில் தடைப்பட நேர்ந்தது. புதுமை ஆர்வத்தால் நாளும் பொழுதும் புதுப்புது பொருட்களை கண்டுபிடித்து வந்த தமிழன் ஆராய்ச்சி செய்வது ஆண்டவனுக்கு அடுக்காது பகுத்து அறிந்து பல்லுயிர் ஓங்குவது பரமனுக்கு பிடிக்காத செயல். பாவகாரியம் பழமையை அப்படியே நம்ப வேண்டும் நம்பா விட்டால் ரௌத்ரவாதி நரகத்தில் விழ தயாராய் இருக்க வேண்டும் என்ற அர்த்தமற்ற அச்சத்திற்கு அடிமைப்பட்டான். வில்லுக்கும் வேலுக்கும் அஞ்சாத வீரகுலம் வெறும் நீற்றுக்கு அஞ்சி அடங்கிற்று. சக்கிமுக்கிக் கல்லைத் தேய்த்துத் தீ மூட்டி அதைச் சேர்த்துத் தீபம் ஏற்றி வைக்கத் தெரிந்து கொண்ட தமிழன் செயல் குன்றி நின்றான். நீரில் செல்ல படகும் நிலத்தில் ஓட சக்கரமும் சமைத்த அறிவு இருட் குகைக்குள்ளே சென்று புகுந்தது. வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் அவன் வகுத்துச் சென்ற வளர்ச்சி தடைப்பட்டது. அன்றோடு அவன் புதுமை யார்வமும் குன்றிற்று.

இவ்வுலக வாழ்க்கைக்கு அதிமுக்கியமான தேவைகளை தேடிக்கொள்வதில் நாட்டம் செலுத்துவதை மறந்து கண்காணாத ஒருகற்பனை உலகை ஆராய்வதிலும் நம்புதவன்றி நம்பிக் கொண்டழுவதிலும் எண்ணாதனவெல்லாம் எண்ணுவதிலும் வாழ்வாவது மாயம் அது மண்ணாவது திண்ணம். பிறவாவரம் தரும் என்று பிதற்றுவதிலும் காலம் கடத்தினான்.

(மிகுதி அடுத்த இதழில்)



# ஏறாவூர் ஸ்ரீ பெரிய தம்பிரான்

# ஆலய புனருத்தாரணம்

கிழக்கின் கிராமங்களை ஆலயங்களின் ஊடாக அபிவிருத்தி செய்யும் நோக்கிலான லண்டன் சைவ ஆலயங்களின் முயற்சிகளில் ஒரு பகுதியாக மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் 5 இல் அமைந்துள்ள பெரிய தம்பிரான் ஆலயத்தை புனருத்தாரணம் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளன.








**அனுசரணை வழங்குவோர்:**

ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம். ஈலிங்
ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம், வோல்த்தம்ஸ்றோ
ஆர்ச்வே ஸ்ரீ முருகன் ஆலயம், ஹைகேட்
ஸ்ரீ ஈழபதீஸ்வரர் ஆலயம், வெம்பிளி
*ஆகிய லண்டன் ஆலயங்கள் இணைந்து அனுசரணை வழங்குகின்றன.*

**இது தமிழர் வாழ்விடங்களை அபிவிருத்தி செய்யும் இலக்கிலான திட்டம்.**

**ஆலயத்தின் புனருத்தாரணத்துக்கு நிதி உதவி வழங்க விரும்பும் அடியார்கள்**

**தொடர்புக்கு : தலைவர் : 0775198508 , பொருளாளர் : 0755799953**

Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa